ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஸு பங்குனி-மீ 26-உ (8—4—1934) | மலர் 20.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

3 அணா வெளியீடுகள்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:— இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

பிரபஞ்ச உற்பத்தி:— இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

பிரகிருதிவாதம்:—இந்நூ கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

வெ. ரா. சொற்பொழிவு
விலை அணா 2,

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2,

பர்னார்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	...	0—8—0
சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை		0—6—C
மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும்	...	2—0—0
ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை	...	0—6—0
சுயராஜ்யம் யாருக்கு	...	0—1—0
சாமிகளின் அடிமைகள்	...	0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்	...	2—0—0
பகுத்தறிவு கீதம்	...	0—1—0
காந்தி கிட்டு	...	0—1—0

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான, மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது!

நமது புதிய பிரசுரங்கள் !!

சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். எ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் பாசாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் 1½ [illegible] ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

சென்னை மாகாணத் தமிழர் மகாநாடு.

(தோழர் சே. தே. நாயகம்.)

மேற்கண்ட அமைச்சரெனக் கூறி எனது பழம் நண்பர் கா. சு. சூரியமூர்த்திப் பிள்ளை அவர்கள் எழுதுவதாக 29-3-34ல் வெளிவந்த லோகோபகாரியில் அச்சிட்ட வேண்டுகோளை விருப்பத்துடன் படித்தேன். சென்ற தைமாதம் வெளிவந்த செந்தமிழ்ச் செல்வியில், மாநாட்டு அமைச்சர் ஒருவர் கையொப்பத்தின்மேல் அரபி எண்களுடனும், ஆங்கில எழுத்துக்களுடனும் அச்சிட்ட மாநாட்டின் முதலாவது அறிக்கையில், இரு அமைச்சர்கள் பெயர்கள் அச்சிட்டிருந்ததில், நண்பர் பெயர் ஒன்றாகக் காணப்படவில்லை. தைமாதத்திற்குப் பின்னால் ஏற்பட்ட வேலைமாற்றமோ, அமைச்சர்கள் தொகுதி கூட்டப்பட்டதோ, செந்தமிழ்ச் செல்வியில் வெளியிட்ட அறிக்கை தவறோ, இப்பொழுது லோகோபகாரியில் வெளியிட்டது தவறோ, தெரியவில்லை.

சென்னைமாகாணத் தமிழர் சங்கமொன்று நிறுவி, அதன் வாயிலாக............தமிழ் மக்களிடை அறிவும், அன்பும், ஒற்றுமையும் மல்கச் செய்வதும் ஆகும், என மாநாட்டின் நோக்கம் என்பதன்கீழ், மேற்கண்ட அறிக்கையில் அச்சிடப்பட்டிருக்கிறது. மாசியில் வந்த செந்தமிழ்ச் செல்வியில், அச்சிடப்பட்ட இரண்டாவது அறிக்கையிலும், மேலே சொன்ன நோக்கம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது நண்பர் எழுதுவதாக லோகோபகாரியில் அச்சிட்டிருக்கும் வேண்டுகோளின் இரண்டாவது பத்தியில், தமிழின் தூய்மையைப் பேணலும், தூய தமிழைப் பரப்புதலுமே மாநாட்டின் நோக்கமெனக் கண்டிருக்கிறது. அமைச்சர்களென இருவேறு பெயருடன் வந்த வெளியீடுகளில், மாநாட்டின் நோக்கத்திலேயே இம் மாபெரும் வேற்றுமைகள் காணப்படுமாயின், புறம்பே ஒதுங்கியுள்ள தமிழர்கள் இம்மாநாட்டை ஒரு சமயம் குறித்த மாநாடாகவும், சிலர் தங்கள் கொள்கைகளைப் பரப்ப எண்ணிய மாநாடாகவும் கருதுகின்றனர் என்று நண்பர் சொல்வது முறையா? அது ஒதுங்கி இருந்தவர்களை வெளியே இழுத்து வீணில் மனம்புண்படப் பண்ணியதாகாதா என்று ஆராய, நண்பருக்குப் பழம் நட்பின் உரிமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சில தமிழர்களின் கருத்தென நண்பர் மதிப்பிட்டது, அவர்கள் அனுப்பியுள்ள தீர்மானங்களிலிருந்து இருக்கவேண்டுமென நம்புகிறேன். மக்களிடை அறிவும், அன்பும், ஒற்றுமையும், மல்கச் செய்யும் பெரும் நோக்கத்துடன் அத் தீர்மானங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா? அல்லவா என அன்புடன் ஆராயும்படி நண்பரை வேண்டிக்கொள்கிறேன். இம்மாநாட்டின் நோக்கத்தில் சமயவளர்ச்சி, சமய உறுதிப்பாடு ஒன்றும் இல்லையா? இல்லையாயின் சமயத்தைப்பற்றிய பேச்சே இல்லாமலும், சமயக் கொள்கைகளும், சமயக் குறிகளும் நுழையாமலும் செய்வதே முறையாகும். அறிவும், அன்பும், ஒற்றுமையும் வளரச் செய்தல் மாநாட்டின் நோக்கமென வெளியிட்டுவிட்டு, அதை மதித்த மக்களுக்குள் உயர்வு தாழ்வைப் புகுத்தும் வழக்கங்களையும், அறிவைப் புறக்கணித்து வேற்றுமையை வற்புறுத்தும் கொள்கைகளையும் ஒழிக்க வேண்டுமெனத் தீர்மானம் அனுப்பினது, சுயமரியாதை என்னும் தன்மதிப்பைப் பேணியதாகாது என வரவேற்பு அமைச்சர் கடுஞ்சொல் சொல்வது தமிழர்களை வரவேற்கும் முறையா எனவும் ஆராயவேண்டுகிறேன். "பிறர் உரிமையைக் கெடுக்காது எவர் எது கூறினும் மாநாடு ஏற்றுக் கொள்ளும்" என அமைச்சர் எழுதுவது நடக்கக்கூடிய காரியமா? அன்புக்கும், ஒற்றுமைக்கும் அடிப்படை, உயர்வு தாழ்வும் பிறவேற்றுமையும் ஒழிவதே என்று கருதுகிறவர்கள், உயர்வு தாழ்வு இருக்கவேண்டுமென்று கருதுகிறவர்களின் உரிமைக்கு, ஊறுசெய்யாமல் எதைக் கூறமுடியும்? மக்களின் மூட வழக்கங்கள் ஒழிந்தாலன்றி அறிவு வளராது, எனக் கருதுகிறவர்கள் மூட வழக்கங்கள் இருக்கவேண்டுமென விரும்புகிற தமிழர்களின் உரிமையைக் கெடுக்காமல், அறிவைப்பரப்பும் மாநாட்டின் நோக்கத்தை எப்படி கைகூடச் செய்வது? இவ்வளவு பரந்த நோக்கங்களை வைத்துக்கொண்டு பேச்சையும், செய்கையையும் குறுக்குவது முடியாத காரியம். செந்தமிழ்ச் செல்வியில் வந்த முதல் அறிக்கையில் சொன்ன நோக்கத்திற்கும், இரண்டாவது அறிக்கையில் சொன்ன நோக்கத்திற்கும் சில வேற்றுமைகள் உள. இப்பொழுது லோகோபகாரியில் வந்துள்ள நோக்கம், மேல் இரண்டினின்றும் பெரிதும் வேற்றுமைப்பட்டுள்ளது. போனது போக, இப்பொழுதேனும் மாநாட்டின் நோக்கம் இன்னது இன்னவைதான் எனதிட்டமாகப் பொறுப்புடன் வெளியிடுங்கள். வெளியிட்ட நோக்கத்திற்குத் தக்கவாறு செய்கையும் இருக்கட்டும். நோக்கத்திற்குப் புறம்பான கொள்கையைப் பரப்ப, அறிவுடையோர் மாநாட்டை நாடார்கள்.

தெளிவுபெறும் நோக்கத்துடனும், கூடுமானால் சீர்திருத்தும் நோக்கத்துடனும், மாநாட்டைப் பற்றி எனக்குத் தோன்றும் சில ஐயங்களையும், குறைகளையும் கீழே குறிப்பிடுகின்றேன். இம்மாநாடு ஏதாவது ஒரு சங்கத்தைத் தழுவி நடைபெறுகிறதா? தமிழ்ப் பொதுமக்கள் கூடி இதை நடத்த முடிவு செய்தார்களா? முந்தியதாயின் எது? மாநாட்டை நடத்த முடிவுசெய்த முதற் கூட்டத்தின் தீர்மானங்கள் என்ன? அந்தக் கூட்டத்திற்குத் திருநெல்வேலி பாளையங்கோட்டை ஊர்களிலுள்ளவர்கள் மாத்திரம் அழைக்கப்பட்டனரா? ஜில்லாவின் பிறஊர்களில் உள்ளவர்களும் அழைக்கப்பட்டனரா? பிற ஜில்லாக்களில் உள்ளவர்களும் அழைக்கப்பட்டனரா? எத்தனை ஊரில் எத்தனை மக்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். எத்தனை ஊரிலிருந்து எத்தனை பெயர் வந்திருந்தார்கள் தனித்தமிழ் வளர்ச்சி தனி நோக்கமாக, அல்லது பெரு நோக்கமாகக்கொண்ட மாநாட்டின் வரவேற்புக் கழகத்தில், கம்பர் நடையை ஒட்டி, இரக்ஷண்ய யாத்திரிகம் என்ற பெருந் தமிழ் நூல் எழுதிய காலஞ் சென்ற கிருஷ்ண பிள்ளையை ஒருவராகக்கொண்டிருந்த நெல்லை இந்துக் கல்லூரிக்குத் தலைவரையும், நெல்லை நாட்டுக் கல்விக்கழகத் தலைவரையும் சமய வேற்றுமையின்றி உழைக்க ஈந்துதவிய கிறிஸ்தவர்களையாவது, தமிழ்க் கல்வியிற் சிறந்து, நுண்ணிய தமிழாராய்ச்சி செய்து, ஆராய்ச்சியிற் கண்டதை அஞ்சாது வெளியிட்டு, இறுதிவரை இறைவனுணர்ச்சி இல்லாதவராய் மரித்த, வண்ணார்பேட்டை வழக்கறிஞர் வேதநாயகம் பிள்ளை எம். ஏ. ஐக் கொண்டிருந்த கடவுள் உணர்ச்சியற்றவர்களையாவது, தூத்துக்குடி மணப்பாடு முதலிய கடற்கரை ஊர்களிலுள்ள பரவர்களுள் தமிழறிஞர் தமிழ்ப்பற்றுடையோர்களையாவது, இஸ்லாம் சமயத்தினரையாவது, நெல்லைநாட்டின் பெருந்தொகையினராகிய நாடார்களையாவது, ஞானியார் போன்றுள்ளோரையுடைய ஆதிதிராவிடர்களையாவது, வேறு சிறு இனத்தார்களையாவது, உறுப்பினராகச் சேர்க்காதது சரியா? இவ்வளவு பெருந் தொகுதியாரை விட்டுவிட்டுத், தூய தமிழை வளர்ப்பது வேறு யாரிடம்? இவர்கள் இவ்வகை முயற்சியில் ஊக்கங்காட்டமாட்டார்கள் என ஐயப்பட்டாலும், அவர்களை ஊக்கப்படுத்த இதுவல்லவா நல்ல சமயம்? இனியேனும் மகாநாடு கூடுவதற்குள், இக்குறையை நீக்க முயல்வார்களாக. இரண்டாவது அறிக்கையில் குறிப்பிட்ட நாள் வரப்பிற்குள், நான் சில தீர்மானங்கள் அனுப்பினேன். அவற்றைப் பெற்றுக்கொண்டதற்கு இதுவரை ஒரு எழுத்துங் கிடையாது. மாநாட்டின் அறிக்கைகள் துண்டுத்தாட்களாக அச்சிட்டுப் பலருக்கும் பல இடங்களுக்கும் பன்னாட்களுக்கு முன்னரே அனுப்பட்டனவென அறிகிறேன். முதலில் புறக்கணிக்கப் பட்டிருந்தாலும், என் தீர்மானங்கள் பெற்ற பிறகாவது, அவ்வறிக்கைகள் எனக்கு அனுப்பப்பட நான் எதிர்பார்த்திருக்கலாமல்லவா? அனுப்பாத காரணம் என்னவோ? மார்ச்சுமாதம் 15-ந் தேதிக்குள் தீர்மானங்கள் மாநாடு வந்துசேர வேண்டுமென நாள்வரை குறித்துக்கொண்டு, மார்ச்சுமாதம் 13-ந் தேதி வெளியான செந்தமிழ்ச் செல்வியில் அறிக்கை வெளியிட்டது, தமிழர்களின் துணையை விரும்புவதாக முதல் அறிக்கையில் வெளியிட்ட செய்கைக்குப் பொருந்திய செய்கையா? நங்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

சோவியத் ரஷ்யாவின் கல்யாண சட்டம்.

(சென்னை தோழர் சி. ஆர். தீனதயாளன்)

தங்களுடைய சுகங்களுக்கு ஏற்ற முறையில் தங்களுக்கு அனுகூலமான வாழ்க்கைத்திட்டத்தை வகுத்துக்கொண்டு, அதுவே நாகரீகமடைந்தயாவருக்கும் மிகவும் பொருத்தமானது என்று வீராப்புப்பேசும்பணக்காரஉலகுக்கு, ரஷியப் புரட்சிக்குப் பிறகு அது வகுத்த சோவியத்திட்டமானது சரமாரியான அதிர்ச்சிகளை யுண்டாக்கி விட்டது. சோவியத் திட்டங்களிலொன்றான மனித வொழுக்கச் சட்டம் என்பது மிகவும் பலமான அதிர்ச்சியைச் செய்தது. உலகுக்கே புதுமையான அம் மனித ஒழுக்கச் சட்டத்தின் முக்கியாம்சம் யாதெனில், ஆண் பெண் பாலர்களின் கூட்டுறவு வாழ்க்கையைத் தட்டுத்தடங்கலின்றி அவரவர்கள் இஷ்டப்படிநடத்தலாம். ஆனால் ஓர் தனிப்பட்ட நபரினுடைய ஓர் செய்கையானது எக் காரணத்தாலும் சமூகத்துக்கு நாசமும்,தீங்கு மிழைப்பதாக மட்டுமிருத்தலாகாது. ரஷியாவில் புகுத்தப்பட்ட இவ்விதமான மாறுதல்களை, சோவியத் ஆக்ஷியின் விரோதிகள், மிகவும் அறுவருக்கத் தகுந்த வகையில் பிரசாரம் செய்யப் புரப்பட்டார்கள். எடுத்துக்காட்டாக, அச் சுயநலம் பிரசாரகர்கள் உலகத்துக்கு என்ன சொன்னார்களென்றால், ரஷியாவிலுள்ள பெண்களும் பொதுவுடமை ஆக்கப்பட்டு விட்டார்கள் என்று புளுகினர். இத்தனை காலமாய் தனிவுடமையிலிருந்த பொருள்களை பொதுவுடமையாகச் செய்ய முடிந்த ரஷியாவுக்குப்பெண்களையும் பொதுவுடமையாகச்செய்வதுகஷ்டமல்லவேஎன்கிற ஞாயத்தில் பொது மக்கள் இக் குறும்பர்கள் வார்த்தைகளை கர்த்தர் வாக்கென நம்பிவிட்டனர்.

முதலாளி உலகில் பெண்கள் நிலைமை.

ஆயினும் சோவியத் ஆக்ஷியான தொழிலாளராக்ஷியின் பரமவிரோதிகளான இவர்கள், இப்படிப்பட்ட பிரசாரத்தின் மூலம் தங்களின் குறுகிய மனப்பான்மையை காட்டிவிட்டார்கள். தங்களிடமுள்ள தட்டுமுட்டுச் சாமான்களை எப்படிமதிக்கிறார்களோ, அதே மாதிரிதான் இவர்கள் பெண்களையும் மதிக்கிறார்கள். ஆகவே மற்ற பொருள்களை எல்லாம் எப்படிச்சொந்தமாக்கிக் கொள்ளலாமோ அதுபோலவே பெண்களையும் சொந்தமாக்கிக்கொள்ளலா மென்பது தான் அவர்கள் பெண்களை மதிக்கும் விதம். இப்படி அவர்கள் பெண்களை தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும் வகைகையை அவர்கள் செய்துகொள்ளும் கலியாணங்களில் காணலாம். கலியாணச் சின்னமான மோதிரம் Weddingring போடுவதின் அர்த்தமென்ன? அம் மோதிரம் எதைக் காட்டுகிறதென்றால் "இது தனிப்பட்டசொத்து--அத்துமீறி நடப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்" என்பதன்றி வேறென்ன? சில நாடுகளில் மேற் குறிப்பிட்டபடியே இன்றளவும் நடைபெற்று வருகிறது. உதாரணமாக இந்தியாவில் விபசாரஞ் செய்வதை இ. பி. கோ. 497ம் செக்ஷன்படி குற்றமாக்கப்பட்டு ஐந்து வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை விதிக்கப்படுவதோடு, குற்றவாளிதான் விபசாரஞ் செய்த பெண்ணின் புருஷனுக்கு அவ் விபசாரத்தால் நேர்ந்த நஷ்டங்களையும் ஈடு செய்து கொடுக்க வேண்டும். இதிலிருந்து நீங்களே தெரிந்துகொள்ளலாம்.

கொஞ்ச காலத்துக்கு முன் பெண்கள் தாங்கள் அடிமைகளாக இருப்பதற்காகவே, பிறந்திருப்பதாக எண்ணிவந்தனர் அதன்படியே அடிமைகளாகி அடிமை வேலையும் செய்தனர். முதலாளிச் சமூகத்துப் பெண்களுக்கு நல்ல மனைவிகள் (அடிமைகள) ஆக வேண்டியதற்கான படிப்பும், பயிற்சியும் தான் கொடுக்கப்படுகிறது. அப் பெண்களுக்கு பொருளாதார சுதந்திரமின்றி ஆண்களையே நம்பி உயிர்வாழ வேண்டிய நிலைமையிலிருப்பதால், கலியாணச் சட்டமானது மிகவும் கொடுமையான அடிமைத்தனத்திலாழ்த்துகிற தென்பதை இவர்கள் நன்குணர்ந்தபோதிலும், வேறு வழியின்மையால் அச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டாக வேண்டியிருக்கிறது.

ஆனாலும் கொஞ்சகாலமாக இச் சந்தர்ப்பங்கள் காலப் போக்கில் மாறிக்கொண்டே வருகின்றன. தொழிலாளி சமூகத்துப் பெண்கள் ஆண்களைப்போலவே தாங்களும் தொழில் செய்து, பொருள் சம்பாதிக்கிறபடியால் தங்களிஷ்டப்படி சுதந்திரமாக வாழ்வதைக் காணலாம். என்றாலும் இப் பெண்கள் கல்வியின்மையால் தங்களின் விடுதலையினாலேற்பட்ட சுகத்தையும், அவ் விடுதலைக்கு மூலகாரணத்தையும் முதலாளி சமூகப் பெண்களுக்கு எடுத்து சொல்லி, அவர்களின் விடுதலைக்கும் குறிப்பாக பெண்கள் சமூகத்து விடுதலைக்கு மான கிளர்ச்சிகள் செய்யப் போதிய செல்வாக்கில்லாமல் இருக்கிறார்கள். பெண்கள் வாக்குரிமைக் கிளர்ச்சியினாலும். சென்ற மகாயுத்த காலத்தில் யுத்த களத்திற்குப் போன அனேக ஆண்களின் உத்தியோக ஸ்தானங்களை நிரப்புவதற்காகக் கல்வி கற்ற பெண்களுக்குக் கொடுத்த ஓர் நல்ல சந்தர்ப்பத்தினாலும் மேல் நாட்டுப் பெண்களின் நிலைமை ஓரளவுக்கு. உயர்ந்தது மகாயுத்தத்துக்குப் பிறகு பெண்கள் அரசியலிலும், வியாபாரம், வர்த்தகம் முதலிய எல்லாத்துறைகளிலும் இறங்கி தைரியமாய் உழைக்க முன் வந்துவிட்டனர். இப்படி வந்ததனால் பொது வாழ்க்கையில் போதிய அனுபவமும், செல்வாக்கும் பெற்றனர்; பெறவே தங்களுக்குள் விடுதலைஉணர்ச்சி அதிகரிக்கலாயிற்று. பெண்கள் இனியும் உங்களுக்கு அடிமைகளென்று எண்ணாதீர்களென்றுஆண்களுக்கு இடித்திடித்துக் கூற ஆரம்பித்து, பெண்கள் விடுதலைக்கான கிளர்ச்சிகள் செய்யவும் முற்பட்டுவிட்டனர். இருந்தபோதிலும் ஐரோப்பிய நாடுகளிப் மகாயுத்தத்துக்குப் பிறகு இன்று வரையில் கலியாணச் சட்டங்களிலாவது, விவாகரத்துச் சட்டங்களிலாவது குறிப்பிடத்தக்க மாறுதல் எதையும் செய்யப்படக்காணோம்.

இவ்விதம் ஐரோப்பாவானது மெதுவாகவும் படிப்படியாகவும் மாறிக்கொண்டு வருகையில் சோவியத் ரஷியாவோ ஒரே புயலில் ஆண் பெண் ஏற்றத் தாழ்வெனும் கொடிய விருக்ஷத்தை வேரோடுசாய்த்துவிட்டது. இதைப்பற்றி லெனின் 1919ம்வருடத்தில் எழுதியிருப்பதாவது:—' இவ்வுலகத்தில் முதலாளித்துவ 'ஜனநாயக' ஆக்ஷிகள்கொண்ட நாடுகளில் மூலை முடுக்குகளிலெல்லாம் கல்வி, அறிவு, நாகரீகம், விடுதலை-ஆகிய இவைகளைப் பற்றியே எங்கும் ஒரே பேச்சாக விருக்கிறது. ஆனால் மேற்குறிப்பிட்ட கேள்பதற்கு மிக இனிமையான சொற்கள், பெண்களுக்கு கலியாணத்திலும், கலியாண ரத்திலும் சரி சமத்துவ மின்மையையும் "சட்ட ரீதியாய்ப் பிறந்த" குழந்தைக்கும் "சட்ட ரீதி தவறிப் பிறந்த" குழந்தைக்கும் வித்தியாசம் கற்பிப்பதையும், பெண் மக்களை இழித்துக் கூறி, அவர்களை அடிமைகளாக்குவதையும் வற்புறுத்தி இவ் வக்கிரமங்களை எல்லாம் அரண் செய்யும் வகையில் ஏற்படுத்தப் பட்ட மகா முரட்டுத்தனமானதும், கொடுமையுமான சட்டங்களோடு கைகோர்த்து உலாவுகின்றன. தொழிலாளராக்ஷியான சோவியத் ஜனநாயக ஆக்ஷியோ, இவ்வனியாயச் சட்டங்களை எல்லாம் ஒழித்துவிட்டதோடு, பணக்கார அக்கிரமங்களை யெல்லாம் நிர்த்தூளியாக்கிவிட்டது. மண வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் ஆண் பெண் இரு பாலருக்கும் சரி சமத்துவத்தை வற்புறுத்தும் சட்டங்களைச் செய்து அமுல் நடத்துகிறது. ரஷியா ஒன்றே இவ் வேலையை வெற்றியுடன் உலகத்துக்கு காரியாம்சத்தில் செய்து காட்டியது.

கல்யாணங்களை ரிஜிஸ்டர் செய்தல்:-

சோவியத் ரஷியாவில் ஓர்ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ கலியாணஞ்செய்துகொள்ள வேண்டுமென்பது அவசியமல்ல. ஆணும், பெண்ணும் எவ்வளவு காலம் திருப்தியாகவும் சந்தோஷத்தோடும் தாங்கள் வாழ்க்கை நடத்த முடியுமோ அவ்வளவு காலம் வாழலாம். இவ் வித்தியா தேசத்தில் கலியாணம் செய்து கொள்ளாமல் ஆண் பெண் சேர்ந்து வாழ்வதை மிகவும்கேவலமாகவும், அருவருப்பாகவும், ஒழுக்கங்கெட்ட நடத்தை என்றும் பொதுஜன அபிப்பிராயம் எண்ணுகிறது. ஆனால் ரஷியாவில் இப்படிப்பட்ட எண்ணமே பொது மக்களிடம் இல்லை. கலியாணஞ் செய்துகொண்டோ அல்லது இல்லாமலோ கூடி வாழும் ஒவ்வொருஆணினுடையவும், பெண்ணினுடையவும் உரிமைகளுக்குச் சோவியத் சட்டம் பாதுகாப்பளிக்கிறது. அப்படியானால் கலியாணங்களை ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டிய அவசியமென்ன இருக்கிறது. ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாமென்று சட்டம் அனுமதிப்பானேன்? சோவியத் சட்டம் கலியாணம் செய்துகொண்டு வாழ்பவர், கலியாணமின்றி வாழ்பவர் ஆகிய இருதாரத்தாருடைய உரிமைகளுக்கும் பாதுகாப்பளித்திருக்கிறபோது ரிஜிஸ்டர் செய்துகொள்ளல் வீண் வேலைதானே என்று கேட்கலாம்? உண்மைதான். ஆனால் சில சமயங்களில் ஓர் குடும்பத்தில் சம்பவிக்கும் சில சிக்கலான விவகாரங்களைத் தீர்த்து அவரவர்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாகையால், ரிஜிஸ்டர் செய்து கொண்டு வாழும் குடும்ப விஷயத்தில் அப்பொறுப்பில் கொஞ்சம் குறைவதோடு, விவகாரங்களைச் சுலபமாகத் தீர்த்து வைக்க அது ஓர் சாதகமாகவுமிருக்கிறது. கலியாணங்களை ரிஜிஸ்டர் செய்யுமிடமான சிவில் ரிஜிஸ்டிரி ஆபீஸுக்கு Yags ஜாக்ஸ் என்று பெயர். மதச் சடங்குகளோடு சர்ச்சுகளில் செய்துகொள்ளும் கலியாண ஒப்பந்தப் பத்திரங்கள் கிஞ்சிற்றும் செல்லுபடியாகாது. ஆயினும் ரிஜிஸ்டிரேஷன் சட்டம் மதச் சடங்குகளை நிராகரிக்கவோ, தடுக்கவோ யில்லை. ரிஜிஸ்டர் செய்வதை மிகவும் சுருக்கமாக முடிக்கப்படுகிறது. ரிஜிஸ்டர் செய்துகொள்ள வந்திருக்கும் மணமகனுக்கும்,மணமகளுக்கும் முதலில் சோவியத சட்டத்து நான்காவது பாகத்தின் தனிப்பிரதி ஒன்றை கொடுக்கப்படுகிறது. அந்தப் பிரதியில் கண்டுள்ள மூன்று நிபந்தனைகளுக்குஇருவரும்சம்மதித்து ஒப்புக்கொளளுவதாய் இருந்தால் தான் ரிஜிஸ்டர் செய்யப்படும். அம்மூன்று

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நிபந்தனைகள் வருமாறு:—

(எ) ரிஜிஸ்டர் கல்யாணம் செய்துகொள்ள இருவரும் முழுமனதுடன் சம்மதிக்க வேண்டும்.

(பி) இருவரும் கலியாண வயதான பதினெட்டு வயதுக்கு உட்பட்டிருத்தலாகாது.

(சி) சட்டத்தின் 132-வது செக்ஷன்படி தங்கள் தங்கள் அடையாளங்களடங்கிய அத்தாக்ஷிப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

ரிஜிஸ்டர் செய்யக்கூடாத சட்ட விரோத மானவைகளாவன:—

(எ) ஒருவரே,அல்லது இருவருமோ இதற்கு முன் ரிஜிஸ்டர் கலியாணமோ அன்றி வெறுங் கலியாணமோ செய்து கொண்டிருந்தால் அவர்களை ரிஜிஸ்டர் செய்தல்.

(பி) இருவரில் ஒருவரோ அல்லது இருவருமோ, தண்டனையடைந்தும், பயித்தியம் பிடித்தும், மனேதிடமில்லாமலும் இன்னும் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி இருந்தாலும் இப்படிப்பட்டவர்களை ரிஜிஸ்டர் செய்தல்.

(சி) ஒரே நேரடியான சந்ததியில் பிறந்திருந்தாலும், முழு ரத்தக் கலப்போ அல்லது பாதி ரத்தக்கலப்போ உள்ள சகோதர சகோதரிகளாயிருந்தாலும்இவர்களை ரிஜிஸ்டர் செய்தல்.

பிறகு ரிஜிஸ்டர் செய்துகொள்ள வந்துள்ள இம் மனுதாரர்களுக்கு சட்டத்தின் 150-வது உட்பிரிவை காட்டப்படுகிறது. அதில், புருஷன் மனைவிக்கோ, அன்றி மனைவி புருஷனுக்கோ மேகரோக சம்பந்தமான வியாதிகளைத்தொற்றவைத்தால் அப்படிச் செய்தவர் ஒருவருடச் சிறைத் தண்டனைக்குட்படுவார்களென்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது. அதன்பிறகு கீழ்க்கண்ட கேள்விகள் ஒவ்வொருவரையும் கேட்கப்பட்டது:- உன்பெயரென்ன? உன் வயதென்ன? நீ என்ன வேலை செய்கிறாய்? உன் தேசமெது? உனக்கு இதற்கு முன் கலியாணமாகி இருக்கிறதா? விவாகரத்து செய்தாயா? குழந்தைகள் உண்டா? இக் கேள்விகளுக்கு இருவரிடமிருந்து வரும் விடைகளை ரிஜிஸ்டரில் பதிவுசெய்யப்படுகிறது. அப்போது பொதுவான குடும்பப் பெயருக்காக (Common surname) புருஷன் பெயர்,அல்லதுமனைவியின் பெயரை வைத்துக்கொள்வதோ, அன்றி கலியாணத்துக்கு முன்னிருந்த பெயர்களை அவரவர்கள் அப்படியே வைத்துக்கொள்ளுவதோ ஆகிய தங்கள் இஷ்டத்தை ரிஜிஸ்டிராருக்கு, தெரிவிக்கலாம்.

வைத்திய உதவி.

மாஸ்கோவில் உள்ள சில ரிஜிஸ்டர் ஆபீஸுகளில் வைத்தியர்களை அமர்த்தப்பட்டிருக்கிறது. ரிஜிஸ்டர் செய்துகொள்ள வருகிறவர்கள் தங்களுக்குப் பிரியப்பட்டால் அவ்வைத்தியர்களிடம் தங்கள் தேகங்களை, பரிசோதித்துக் கொள்ளலாம். ஆணையும், பெண்ணையும் தனித்தனியே பிரத்தியேகமாக பரீக்ஷிக்கப்படுகிறது. வைத்தியர் பரீக்ஷையில் தான் அறிந்த விஷயங்களை மிகவும் பத்திரமாகவும், ரகசியமாகவும் வைப்பார். பரீக்ஷைக்கு ஒப்புக்கொடுத்த நபர் ஆணானாலும், பெண்ணானாலும் வைத்தியர் கேட்கும் கேள்விகளனைத்துக்கும் பதில் சொல்ல வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ரகசியமானதும், வெளிக்குச் சொல்லக் கூடாததுமான விடைகளைச் சொல்லாமல் விட்டுவிடலாம். பிரத்தியேகமானதும், ரகஸ்யமானதுமான அவ்விஷயங்களுக்கு வைத்தியர் தக்க ஆலோசனையும், வழியும் சொல்லக்கூடுமானால், மேற்கண்டவைகளில் ஒன்றையும் மறைக்காமல் வெளியிடவேண்டும். மணம் செய்துகொண்ட தம்பதிகளை வைத்தியர் கேட்கும் முக்கியமான கேள்வியாதெனில்; "நீங்கள் பிள்ளைகள் வேணடுமென்று ஆசைப்படுகிறீர்களா?" என்பதாகும். இக்கேள்விக்கு பதிலிருந்தும் முகத்தான் தங்களுக்கு பிள்ளைகளே அவசியமில்லை என்றோ அல்லது இப்பொழுது ஒன்றும் வேண்டாம் கொஞ்சகாலம் பொருத்து பார்த்துக்கொள்ளலாம் என்றோ அவர்கள் சொன்னால், வைத்தியர் மணமகளுக்கு கற்பத்தடையைபற்றியும், அதற்கான முறைகளை போதிக்கும் இடங்களைப்பற்றியும் அறிவிப்பார். அதோடு வைத்தியர் இருவர்களின் தேக சுகததிற்கான இதரவிஷயங்களையும் போதிப்பார். அத்தியாவசியமான இவ்வைத்திய பரீக்ஷை தற்போது சில ரிஜிஸ்டர் ஆபீஸுகளிலேதான் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் சோவியத் அரசாங்கம் கொஞ்சகாலத்துக்குள் எல்லா ஆபீஸுகளிலும் ஸ்தாபிக்க முயற்சித்து வருகிறது. இவ்வைத்திய பரீக்ஷையை எல்லோர் பேரிலும் நிர்பந்திக்கப்படுவதில்லை. இஷ்டமிருந்தால் செய்துகொள்ளலாம். இச்சந்தர்ப்பத்தில் ஒன்றைமட்டும் குறிப்பிட எண்ணுகிறேன். அதாவது கருச்சிதைவை (abojtion) சோவியத் சட்டம் அனுமதிக்கிறது. கல்யாணமானவளோ, அல்லது ஆகாதவளோ எவளாயினும் சரி கற்பமடைந்துவிட்டால் இஷ்டமிருப்பின் ஆபரேஷன் மூலம் கருவழித்துவிடலாம். ஆனால் இச்சிதைவு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். அவை வருமாறு:—

1. மூன்றும் மாதத்துக்கு முந்தி சிதைக்கவேண்டும்.

2. தகுந்த ரணசிகிச்சை வைத்தியரிடம் ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும்.

3. ஆபரேஷன் செய்யும் ஆஸ்பத்திரி முதல்தரமான நல்ல ஆஸ்பத்திரியாய் இருக்கவேண்டும்.

சொத்துரிமை.

புருஷன் மனைவியிருவரும் அவரவர்களுக்குப் பிடித்தமான தொழில் செய்து சம்பாதிக்க பூரண உரிமையுண்டு. எந்தவிதம் தாங்களிருவரும் சேர்ந்து குடும்பத்தை நடத்துவதென்பதை இத்தம்பதிகளினிஷ்டத்திற்கே விடப்பட்டிருக்கிறது. புருஷன் மனைவி இல்லத்தில்தான் வசிக்கவேண்டும். அல்லது மனைவி புருஷனிடத்தில்தான் வசிக்க வேண்டுமென்கிற கட்டுபாடெதுவும் கிடையாது. கலியாணத்திற்குமுன் புருஷன் சேமித்து வைத்திருக்கும் சொத்து அவனுக்கே சொந்தமானது. இதுபோல் மனைவி சேமித்து வைத்திருப்பது அவளுக்கே சொந்தமானது. அது அவரவர்களின் தனிச் சொத்தாகும். ஆனால் புருஷன் மனைவி என்றுகூடி குடும்பம் நடாத்தும் காலத்தில் இருவரும் சம்பாதிக்கும் சொத்து கூட்டுச்சொத்தாகும். அதாவது அந்த சொத்து புருடன் மனைவி இருவருக்கும்சொந்தமானது. கூட்டுச்சொதது சம்பந்தமாக தம்பதிகளுக்குள் சச்சரவு நேரிட்டால், அதில் புருஷனுக்குச் சேரவேண்டிய பாகமெவ்வளவு மனைவிக்குச் சேரவேண்டிய பாகமெவ்வளவென்று நியாயஸ்தலம் நிர்ணயித்து ஒழுங்குபடுத்தும். ரிஜிஸ்டர் கலியாணஞ்செய்து கொண்டவர்களுக்கு மாத்திரமன்றி, புருஷன் மனைவிகளான கலியாணமின்றிவாழும் யாவருக்கும் இதேவிதிதான். குடும்பச்சொத்தில் புருஷன் பாகம் இவ்வளவு, மனைவி பாகம் இவ்வளவு என்று முதலில் அவர்களிருவரும் கலந்து நிர்ணயித்துக் கொள்ளுவார்கள். ஆனால் இந்நிர்ணயிப்பு சட்டவரம்பிற் குட்பட்டிருக்கவேண்டும். புருஷனுடைய தனிச்சொத்தில் மனைவிக்குச் சுதந்திரமோ, மனைவியின் தனிச்சொத்தில் புருஷனுக்குச் சுதந்திரமோ கிடையாது. அப்படி ஒருவரின் தனிச்சொத்தை மற்றொருவர் அபகரிக்க சூட்சி செய்தால் அதற்கு அரசாங்கம் இடங்கொடுக்காது.

ஜீவனாம்சம்.

புருஷன் வேலைசெய்யச் சக்தியற்றுப் போய்விட்டாலும், அல்லது பொருளுதவி வேண்டிய நிலைமையிலிருந்தாலும் மனைவிதான் உதவிசெய்யக்கூடிய நிலைமையிலிருந்தால் அவனுக்கு வேண்டியதைக் கொடுத்தாக வேண்டும். அதுபோல் மனைவி சக்தியற்றகாலத்தும் பொருள் தேவையானபோதும் புருஷன் கொடுத்தாக வேண்டும். இருவரில் யாராவது ஒருவருக்கு வேலை கிடைக்காதகாலத்தில் வேலை கிடைக்கும் வரைக்கும் சம்பாதிக்கிறவர் உதவி செய்யவேண்டும். இதுபோன்ற, வேலை செய்ய சக்தி யிழந்தபோதும் வேலை கிடைக்காத காலங்களிலும் ஜீவனாம்சம் பெறும் உரிமை விவாகரதது செய்துகொண்ட பிறகும் இருவருக்கும் இருக்கிறது. விவாகரத்தான தேதியிலிருந்து ஒரு வருடம் வரையில்தான் அப்படிப்பட்ட ஜீவனாம்ச உதவி கொடுக்கப்படும். இந்த ஜீவனாம்ச சட்டம் கலியாணம் செய்து கொண்டும், அப்படி ஏதும் செய்து கொள்ளாமலும் புருடன் மனைவியா வாழும் யாவரையும் கட்டுப்படுத்துகிறது.

விவாகரத்து.

புருஷன் மனைவியரில் யாராவதொருவர் இறந்துவிட்டாலும், இறந்துவிட்டதாக நிர்ணயிக்கப்பட்டுவிட்டாலும், விவாகத்தை ரத்துசெய்துவிடலாம். தம்பதிகள் உயிருடன் இருக்கையிலும் பிடித்தமில்லையானால் இருவரும் இசைந்து ரத்துசெய்து கொள்ளலாம். அல்லது விவாகரத்து செய்துகொள்ள விரும்புபவர் ஆபீசுக்கு மனுசெய்து ரத்துசெய்யலாம். சிவில் ரெஜிஸ்டர் ஆபீஸிலே விவாகரத்துக்களையும் ரெஜிஸ்டர் செய்கிறார்கள். ரிஜிஸ்டர் கலியாணம் செய்து கொண்டவர்கள்தான் கலியாணரத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்கிற அவசியமில்லை. புருஷன் மனைவி என்கிற முறையில் வாழும் எல்லோரும் இஷ்டமிருப்பின் விவாகரத்தை ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம். விவாகத்தை ரத்து செய்து கொண்டபிறகு ஒவ்வொருவரும் என்னபெயர் வைத்துக்கொள்ளப்போகிறார்களென்பதைத்தெரிவிக்கலாம். இதில் இருவரும் ஒரு முடிவுக்கு வராவிட்டால் தங்கள் கலியாணத்துக்கு முன் அவரவர்களுக்கிருந்த பெயர்களை வைத்துக் கொள்ள வேண்டியதே. விவாகரத்தை ரிஜிஸ்டர் செய்யுங்காலத்தில் ரிஜிஸ்டிரார் சில முக்கியமான விஷயங்களை கவனிக்கிறார். விவாகரத்து செய்ய வந்திருக்கும் தம்பதிகளுக்கு குழந்தைகள் இருக்கின்றனவா வென்றும், அப்படி இருந்தால் எந்தெந்தக் குழந்தைகளை யார் யாருடைய பாதுகாப்பில் வைப்பதென்பதையும், குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய செலவுகளுக்கு ஒவ்வொருவரும் எவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்பதையும், இருவரில்யாராவதொருவர் ஜீவனாம்ச உதவி பெறக்கூடிய நிலையிலிருக்கிறாரா வென்பதையும், அப்படி இருந்தால் ஜீவனாம்சத்தொகை எவ்வளவென்பதையும், நீர விசாரித்து அவர் ஒழுங்கு செய்வர். மேற்குறிப்பிட்ட விஷயங்கள் யாவற்றையும் தம்பதிகள் தாமாகவே யோசித்து ஓர் முடிவு செய்துகொண்டால் அம்முடிவை விவாகரத்து ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்படும். இவ்வாறு ரிஜிஸ்டர் செய்யப்பட்டதை இரண்டு காப்பிகள் எடுத்து இருவருக்கும் ஒவ்வொன்று கொடுக்கப்படுகிறது. இவ்வித ஒப்பந்தம் மனைவி, புருஷன் குழந்தைகள் ஆகிய இவர்கள் ஒவ்வொருவருக்கும் சேரவேண்டிய பொருள்களையடைய பூரண அதிகாரமளிக்கிறது. மேற்கண்ட ஒப்பந்தத்தில் கண்டபடி எந்த நபராவது நடந்து கொள்ளத் தவறினால், பஞ்சாயத்துக்கு மனுச்செய்து கொள்ளலாம். பஞ்சாயத்து எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கொடுக்கும். ஆண் பெண்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

தமிழ் மொழி வளரவேண்டுமானால்?—

Ivon (ஐவன்)

தமிழ்மொழி வளரவேண்டுமானால், தமிழர்கள் பல துறையிலும் முன்னேற்றமடைய வேண்டும். தமிழர்கள் முன்னேற்றமடையாதவரையில் தமிழ்மொழி முன்னேற்றமடையப் போவதில்லையென்பது உறுதி. தமிழ்மொழி முன்னேற்றமடைவதென்றால் என்ன? தமிழ்மொழியைத் தமிழரேயன்றி பிறரும் விரும்பிப் பயிலவேண்டும். அங்ஙனம் பல நாட்டினரும் விரும்பிக் கற்கவேண்டுமென்றால் செய்யவேண்டியதென்ன? தமிழ்மொழி கடவுளால் உபதேசிக்கப்பட்டது; தமிழ்மொழி எலும்பைப் பெண்ணாக்கிவிடும், முதலையுண்ட பாலனையழைத்துவிடும், மூடிய கதவைத் திறக்கும் ஆற்றலுடையது, என்று இன்னோரன்னக் கதை கட்டிவிட்டால் மயங்கிப் பலரும் கற்கமாட்டார்கள். இதைக் கேட்டமாத்திரத்தில் எள்ளி நகையாடுவரேயன்றி வேறொன்றும் செய்யார். ஆகையால் தமிழுக்கு இன்னோரன்ன தெய்வத் தன்மைகள் கற்பிப்பதைவிட்டுவிட்டுமக்களின்வாழ்விற்குரிய பல இலக்கியங்கள் தமிழ்மொழியில் உண்டாகவேண்டும். அங்ஙனம் மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பல நூல்கள் தமிழ்மொழியிலுண்டாகவேண்டுமானால், தமிழர்கள் பல துறையிலும் முன்னேற்றமடைதல் வேண்டும். இன்று ஆங்கிலம் சிறந்த மொழியாகக் கொண்டாடப்படுகின்றதென்றால் ஆங்கிலத்தைப் பல நாட்டினரும் விரும்பிப் படிக்கின்றார்களென்றால், அதற்குக் காரணம் என்ன? அம்மொழிக்கேற்றப்பட்டிருக்கும் தெய்வீகத் தன்மையாலா? அன்று. (அவ்விதம் அம்மொழிக்குத் தெய்வீகத் தன்மைகற்பிக்கவுமில்லை.) பின்னர் எதனால் அம்மொழியைப் பேசுகின்ற, எழுதுகின்ற ஆங்கிலேயர்கள் பல துறையிலும் முன்னேற்றமடைந்திருப்பதே காரணம். முன்னேற்றமடைந்தவர்களால் செய்யப்பட்ட இலக்கியத்தைப் படித்தால் தாழ்ந்தோரும் முன்னேற்றமடையும் வழியை அறிய ஏதுவிருக்கின்றமையின், எல்லோரும் விரும்பிக் கற்கின்றனர். அரசியலிலும், அறிவியலிலும், வாணிபத்திலும் மற்றெந்தத் துறைகளிலும் அவர்களுக்கிணையானோர் எந்நாட்டினருமில்லையென்ற துணிவினாலன்றோ அவர்கள் மொழி அங்ஙனம் போற்றப்படுகின்றது. அதைவிடுத்து மொழியாலேயே அந்நாட்டு மக்கள் போற்றப்படுவதென்றால் அது எங்ஙனம் முடியும். இன்று ரஷ்ய மொழியைப் பலரும் விரும்பிக் கற்க முற்படுகின்றார்களென்றால் அவர்களடைந்திருக்கும் ஒரு நன்னிலையாலன்றோ. அவர்கள் போட்டிருக்கும் சமதர்மத் திட்டத்தினாலன்றோ? அவர்கள் நாட்டில் பசிப்பிணி, வறுமை, கொள்ளை முதலியன கிடையாதென்று கேள்விப்படுகின்றதனாலன்றோ. இல்லையேல் அவர்கள் மொழியைக் கற்க எவர்தான் முற்படுவர். இதற்கு முன் அவர்கள் உலகத்திலேயே உயர்ந்த நிலை அடைவதற்குமுன் அவர்கள் மொழியை எவர்தான் கற்க முற்பட்டார். ஆகையால் நாட்டினரால் மொழிக்கு மதிப்பு ஏற்படுமேதவிர மொழியால் நாட்டிற்கு மதிப்பு ஏற்படுவது ஒருநாளுமில்லை. அங்ஙனம் தமிழர் உயர்நிலையை அடையவேண்டுமானால் இப்பொழுதிருக்கிற கோவில்களும், மடங்களும், தொழிற்சாலையாக மாறுதல் வேண்டும். அப்பொருளைக்கொண்டு விஞ்ஞானக் கல்வியையும் நாட்டினர் பசிப்பிணியைத் தீர்த்து நல்வாழ்வளிக்கும் கல்வியைப் போதிக்கும்படியாகவும் செய்யவேண்டும். அங்ஙனம் செய்வதென்றால் ஒருவரால் இருவரால் முடியக்கூடிய காரியமன்று. பலரும் சேர்ந்த சங்கங்களாலேயே முடியவேண்டும்.

சங்கங்கள்.

சங்கங்கள்நம் நாட்டில் பல இருந்தபோதிலும் எதற்காகவேற்பட்டனவோ அக்காரியத்தை மறந்துவிடுகின்றன. பொதுவாக இந்தியர்களிடையே (Co-operation) ஒற்றுமை கிடையாது என்றும், ஒருவருக்கொருவர் நம்பிக்கைகொள்வது கிடையாது என்றும், அதனாலேயே கூட்டுறவுத் திட்டங்கள் பயனற்றுப் போகின்றனவென்றும் மேனாட்டினர் பலரும் கூறிச்சென்றனர். இச்சங்கங்கள் தோன்றி எக்காரியத்தைச் சாதித்துவிட்டன. தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் தோன்றி அழியவில்லையா? இந்திய சர்க்கா சங்கம் தோன்றி மறையவில்லையா? எவ்வளவோ சங்கங்கள் நீர்மேற்குமிழிபோல் தோன்றுகின்றன. தோன்றிமறைகின்றன, நம் தமிழ் நாட்டில் தமிழின் முன்னேற்றத்திற்கென ஏற்பட்டது.

தமிழ்ச் சங்கங்கள்.

தமிழ்ச் சங்கங்களில் மூன்றே சிறப்பாகக் கொள்ளத்தக்கன. அவைகளில் ஒன்று (மதுரை) நூலினர் மயமாக அவர்கள் நலத்திற்குப்பாடுபடுகின்றது. மற்றொன்று (திருநெல்வேலி) சைவமதத்திற்கென உழைக்கின்றது. இன்னொன்று (கரந்தை) சைவர், வைணவர், பிராமணர் முதலிய பலரையும் திருப்திப்படுத்த முயன்றபோதிலும் சைவரே வெற்றிகொள்ளுகின்றனர். அச்சங்கத்தில் உறுப்பினராயுள்ளோர் கிறிஸ்துவர், மகமதியர், ஆங்கிலேயர், சைவர், வைணவர் முதலிய பலருமாவர். அங்ஙனமிருக்க சைவத்திற்குமட்டும் சலுகை காட்டுவானேன். உதாரணமாக சமீபத்தில் நடந்த 23-ம் ஆண்டு விழாவில் ஒரு தமிழ்ப் பண்டிதர் "நமப் பார்வதிபதியே" போடவும், அங்கிருந்த சைவ சிகாமணிகள் "அரகர மகாதேவா" போடவும், தலைவரும் ஏனையோரும் பேசாது வாய் மூடிக்கொண்டிருக்கவும் காரணம் என்னை. மொழியை வளர்ப்பதற்கென ஏற்பட்ட சங்கத்தின் ஆண்டுவிழாவில் மதத்தைப் பரப்ப முயலுவானேன்

மொழிக்கும், மதத்திற்கும் யாதொரு தொடர்பும் வைக்கக்கூடாது. சைவமும், தமிழும், வைணவ ஆழ்வார்களும் தமிழும் என்று இன்னோரன்ன தலைப்புகளை எடுத்துக்கொண்டு பேசுதலும் கூடாது. உண்மையாக ஆராயுமிடத்து தமிழை உண்மையாக மதிக்கும்படி செய்தவர் பிற மதத்தினர்களான சமணர், கிறிஸ்தவப் பாதிரிமார்கள் முதலியவர்களேயாவார்கள். மேற்கூறிய சங்கத்தின் சார்பாக நாயன்மார்கள் பிறப்புநாள் கொண்டாடுவானேன்; பின்னர் வைணவரைத் திருப்திசெய்ய ஆழ்வார்கள் நாட்கள் கொண்டாடுவானேன். இனி கிறிஸ்துவரைத் திருப்திசெய்ய கிறிஸ்துநாளும், மகமதியரைத் திருப்திசெய்ய மகம்மது நபிநாளும் கொண்டாடுவார்களா? அல்லது அவர்களை அலட்சியம்செய்து ஒதுக்கிவிடுவார்களா? இவர்கள் உண்மையாகவே தமிழ்மொழி வளரவேண்டுமென்று எண்ணுவார்களானால், மதத்தைப்பற்றிய விஷயங்களில் தலையிடுதல் கூடாது. அல்லது மொழியின் போர்வையைப் போட்டுக்கொண்டு மதத்தைப் பரப்புதல் கூடாது. மொழி வேறு, மதம் வேறு என்று உணர்தல்வேண்டும். ஒரு மொழிக்கு பல மதத்தினரும், பல கொள்கையினரும் உரியவராவர். அன்றியும் மதம் இன்னும், சின்னாளில் அழிபட்டுப்போகும். மொழி மக்களுள்ளவரையில் அழியாது. ஆகையால் மொழிக்கும், மதத்திற்கும் தொடர்புண்டாக்கும் எண்ணத்தை அறவே ஒழித்தல்வேண்டும்.

இன்னும் இச்சங்கங்கள் செய்கின்ற வேலை என்ன?

ஒரு நூலுக்கே பலவுரைகள் வெளியிடுவதும், ஒரு சொல்லுக்கே பல பொருள்கள் கற்பிப்பதும், ஒரு சூத்திரத்தை வைத்துக்கொண்டு பல விருத்தியுரை எழுதுவதும், உரைக்கு மறுப்பு, மறுப்புக்கு மறுப்பு வெளியிடுவதைத் தவிர வேறு என்ன! சம்பந்தர் காலம் ஆறாம் நூற்றாண்டா? ஏழாம் நூற்றாண்டா? அப்பர் பிறந்தது திங்கட்கிழமையா? புதன் கிழமையா? என்றெல்லாம் ஆராய்வதனாலா தமிழ்மொழி வளர்ந்துவிடும்? உண்மையாக இச்சங்கங்கள் தமிழின் மேன்மைக்காக பாடுபடுகின்றனவென்றால் தொழிற்சாலைகளும், தொழிற் கல்லூரிகளும் ஆங்காங்கே நிறுவித் தமிழ்மொழியிலேயே எல்லா நடவடிக்கைகளும் செய்தல்வேண்டும். தமிழர் பல புத்தம்புதுப் பொருள்கள் கண்டுபிடிக்கும்படியான ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவுதல்வேண்டும். தமிழ்நாட்டில் செய்யப்படும் பொருள்களுக்குத் தமிழிலேயே பெயரிடல்வேண்டும். தமிழ்நாட்டில் செய்த பொருள்கள் பல நாட்டினருக்கும் உபயோகப்படக் கூடியதாயிருத்தல் வேண்டும். அவைகளைப் பிற நாடுகளுக்கனுப்பல்வேண்டும். முன்னாளில் தமிழ்மொழிச் சொற்கள் பல மொழிகளிலும் புகுந்திருக்கின்றதென்று கூறினால் எங்ஙனம் போய்ப் புகுந்தது. அந்நாளில் தமிழ்நாட்டுப் பொருள் பல நாட்டிற்கும் சென்றபடியாலல்லவா?

தமிழ்மொழி வளரவேண்டுமானால் தமிழ்மொழிக்கெனத் தக்க கல்லூரி ஒன்று நிறுவப்படல்வேண்டும். தமிழ்மொழிக்கென பல்கலைக் கழகம் நிறுவப் போவதாகக் கூறிவிட்டு ஒரு 'ராஜா' பார்ப்பன வலையுளகப்பட்டுக் கொண்டார். அரசியலார் ஆதரவில் தமிழ்க் கல்லூரியொன்று திருவையாற்றில் சமஸ்கிருதக் கல்லூரியுடன் ஒதுக்கிடம் பெற்றுளது. பூணூல் போட்டு, விலாப்புடைக்கவுண்டு மல்லாந்து தூங்கிக்கொண்டிருந்த (சமஸ்கிருதக் கல்லூரியை) சத்திரத்தை ஏ. டி. பன்னீர்செல்வமவர்களும், த. வே. உமாமகேஸ்வரன் அவர்களும் அப்பொழுது அவர்களுக்கிருந்த தமிழரபிமானத்தால் தமிழ் மாணவர்களுக்கும் இடங் கொடுக்கும்படியாக செய்தனர். ஆனால் அக் கல்லூரி இன்னும் பார்ப்பன மயமாகவே விளங்குகின்றது. செத்துப்போன மக்களுடைய வாழ்க்கைகுப் பயன்படாத 'தேவபாடைக்கு'க் காட்டப்படும் சலுகை தமிழ்மொழிக்குக் காட்டப்படுகின்றதா? இல்லை. இதன் தலைவர் இப்பொழுது ஒரு வைதீகப் பார்ப்பனர். இவர் செய்யும் அட்டூழியங்களும் எட்டிலடங்கா. தமிழ் மாணவர்களை மிருகங்களாகவே நடத்துகின்றார்; ஒரு மாணவனை உயர்தரப் பள்ளிக்கு ஆசிரியராகும் தகுதியுடைய ஒருவனை, அறுபது அடி அடித்தாரென்றால், அவர் ஆணவத்தை என்னென்று சொல்வது! இதைப் பற்றி மேலதிகாரிகளும் கவனிக்கவில்லையென்றால், அத் தலைவர் எதுதான் செய்யமாட்டார்; பருத்தநிவிற்கு மதிப்புக் கொடுக்கும் ஒரு மாணவனை நீ என்ன அநியாயம் நடந்தாலும் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்; இல்லையேல் நாக்கையறுத்துவிடுவேனென்று அவர் மனுச சட்டத்தை உட்கொண்டு நெஞ்சுதுணிந்து சொன்னால், அதை மேலதிகாரிகளுக்கறிவிக்க அவர்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

சமதர்ம உலகைக்காண யுவர்காள் வம்மின்!

(கோழும்பு தோழர் எம். கே. எம். காதர்)

தோழர்காள்!

இன்று யாம் இக் குவலயத்தின் கண்ணுள்ள அஷ்டதிக்குகளை நோக்குவோமாயினும், நம் முன் காக்ஷிதருவது என்னவென்றெண்ணுகின்றீர்கள்? அதுதான் "புரட்சி" மாறுதல் என்னும் வாலிப உலகின் புனித எழுச்சி. எங்கு புரட்சியில்லையோ, நிச்சயம் ஆங்கு உணர்ச்சியில்லை என்பதே என் முடிவான துணிவு. புரட்சி என்னும் மனித உணர்ச்சியை-சிலர் தப்பர்த்தம் செய்வது போன்று "புரட்சி மனித வாழ்க்கையின் வைரி, ஜனசமூகத்தினிடை நிம்மதியற்ற நிலையைச் சிருஷ்டிக்கும் பெரும் பாதக எழுச்சி. சுயவறிவற்றதன்மை," என்னும் இன்னோரன்ன போலி எண்ணங்களைக் கொள்ளக்கூடியனவல்ல.

புரட்சியின் எழுச்சிதானென்னே! அது மக்களிடையே பழக்கவழக்கமென்னும் தோஷத்தால் புகுந்துள்ள மூடப் பழக்க வழக்கங்கள் (தற்கால எழுச்சிக்கும், வருங்கால உணர்ச்சிக்கும் மலைபோல் மறையா நிற்பவை) ஜாதித் திமிர், மதத் திமிர், நிறத்திமிர் மதத்தின் பெயரால் புனருலக எழுச்சிக்குத் தடையோடும் புரோகிதக் கூட்டத்தை வேருடன் கல்வி எறிதல், இன்னும் இவைபோன்ற எண்ணத்துலையா இடுக்கண்களை எல்லாம் ஹதம்செய்யவும், பணக்காரன், ஏழை, முதலாளி, தொழிலாளி, எஜமான், வேலைக்காரன் என்னும் ஏற்றத் தாழ்வில்லாது எல்லோர்களும் "தோழர்" என்னும் அபேத எண்ணமும், உலகில் சமதர்மத்தை நிலைநாட்டச் செய்ய முற்படும் இயக்கமும் "புரட்சி" என்று கொள்க.

தோழர்காள்! உங்களின் உணர்ச்சியை, மனச் சாட்சியின் மாணபை, அறிவின் ஆற்றலை, மதத்தின் பெயராலும், பண்டையப் பழக்க வழக்கமென்னும் சுயநலக் கொளகைகளாலும் அடிமைப்படுத்த முற்படும் மதப் பித்தர்களையும், மூடப் புரோகிதப் பிண்டங்களையும், இன்னும் இன்னோர்களின் சகபாடிக் கூட்டத்தினர்களையும், தலை நிமிர்ந்து தாண்டவமாடாதவாறு தயை, தாக்ஷண்யம் முதலியவைகளைக் கிஞ்சிற்றும் கொள்ளாது பேடிகளைப்போன்று தங்களின் உள்ளக் கிடக்கைகளைப் பயந்து வெளியிட அஞ்சாமல் போராடி அக் கூட்டத்தினர்களின்கொள்கைகளைப் புதைகுழிபுக்குமின்!

முதலில்லா வியாபாரிகள்.

இன்று யாம் மதத்தின் நிலைமையைக் கவனிக்கப் புகுவோமாயின் அந்தோ! அது ஏழைகளின் துரோகியாகவும், முதலில்லா வியாபாரிகளான புரோகிதப் பிண்டங்களின் தொழிற்சாலையுமாகவன்றோ இருக்கின்றன.— எவ்விதம் பணக்கார வர்க்கத்தினர் கையில சிக்குண்ட தொழிற்சாலைகளில் நம்முடன் பிறந்த சகோதரர்கள் அல்லும் பகலும் சளையாது உழைத்துப் பகல் பாதிவயிறுஉண்டு, இரவு உண்ணுமலும் இவ்விதமாக தங்களின் ஜீவதசைகளை எல்லாம் பலஹீனமுறச் செய்து தங்களின் வாழ்க்கையை சுகபோகமாய் நடத்த வழியின்றி கஷ்டமும், துக்கமுமே தாங்கள் கண்ட பலன் என்றெண்ணி—முதலாளிப் பிண்டங்களின் தொப்பை வயிறு நிரப்புவதற்கே உழைத்துக்கொடுத்து கஷ்டப்படுகின்றார்கள். இம் முதலாளி வாக்கத்தினர் ஏழைத் தொழிலாளிகளின் உழைப்பின் பயனை உண்டு கொழுத்து அன்னவர்களின் ஜீவனுக்கே ஹானியை விளைவிக்கின்றப்போல் மேலே சொன்ன அப்புரோகிதப் பிண்டங்களுக்கு தாங்களரும் பாடுபட்டுழைக்கும் அற்ப ஊதியத்தின் பெரும்பகுதிகளை அன்னவர்களின் மித்திரபேத போதனையின் உற்சாகத்தில் மதிமயங்கி அவர்களால் ஆக்ஞாபிக்கும் மதக் கிரிகைகளுக்கும், கோவில், பள்ளி, மசூதி சர்ச் முதலிய ஸ்தலங்களுக்கும் தங்களின நிலைமையை முற்றிலும் மறந்து வாரி வாரி இறைதது விடுகின்றார்கள்.

மதமும்—பணக்காரர்களும்.

தற்காலத்தில் மதத்தின் போக்கு எவ்வித நிலைமையில் இருக்கின்றன வென்றால், ஏழைகளின் வைரியாகவும், பணக்காரர்களின் உற்ற சினேகிதர்களாயும், சுயநலததவர்களின் அன்பனுகவுந்தான் இருக்கின்றன. மததவின்பெயரைக்கொணடேபணக்கார்க்கூட்டத்தினர், தங்களின் தன்மைக்கு எவ்வித ஹானியுமேற்படா வண்ணம் வயிறுவளர்த்துக்கொண்டு, மதத்தின் ரக்ஷகராம், புரோகிதப் புல்லறிவாளர்களுடுக்கு மிதமிஞ்சிய கைலஞ்சம் கொத்து "ஏழைகளெல்லாம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள், அது அன்னவர்களின் ஜென்மலாபம் பணக்காரக் குழாம், கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், இன்னவர்களின் ஆதிக்கத்திற்கே, ஏழையர்கள் கட்டுப்பட்டு கிடக்கவேண்டுமென்பதே சிலரின் சித்தம் அல்ல (ஹ்)வின் அமைப்பு எஹோவாவின் எண்ணம் மதப்போதகர்களே! அன்னவர்களிருவருக்கும் வேலி போன்றவர்கள்" என்றெல்லாம் புத்திக்கும், யுக்திக்கும் அப்பேர்பட்ட தன்மைதான துர்ப்பிரசாரம் செய்ய ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

'கஷ்டத்தின் பின்னே சுகமுண்டு' என்னும் சித்தாந்தத்திற்கேற்ப, லக்ஷியமே கண்ணேக்கினவர்களாய் எவ்வித எதிர்ப்புக்கோ, அன்றி கஷ்டத்திற்கோ பின்வாங்காதுஉழைக்க முற்படல்வேண்டும். இவ்வித லக்ஷியத்தை ஸ்திரம் பெற்றோங்கச் செய்வதற்கு அத்யாவசியமாக ஆங்காங்கு சமதர்மச் சங்கங்களும், சமதர்மப்பத்திரிகைகளும் பல உண்டுபண்ணி மக்களுலகில் ஓர் சாத்வீகப் புரட்சியை கிளர்ச்சியை, எழுச்சியை உண்டாக்கல் வேண்டும். இவ்விதம் முயன்றால்தான், கோறிய லக்ஷியத்தை குறுகிய காலத்திலடைய முடியும்.

தேசியத்தலைவர்கள் கண்ட உண்மை.

இந்தியாவின் தேசிய உணர்ச்சியை சிருஷ்டித்த "காங்கிரஸ்" மஹா சபை தோன்றியது 1885-ம் ஆண்டாகும். இதுவும் சற்றேறக்குறைய அரை நூற்றாண்டை எய்துவிட்டது. ஆனல் அவர்கள் கோரிய பூர்ண லக்ஷியத்தையும் இந்நீண்டகாலஉழைப்பில் பெற்றுக்கொள்ள வில்லை. இதற்கு மூலகாரணம் இந்நாட்டிலுள்ள எண்ணத்துலையா மதங்களும், அதன் கிளைகளுமேயாகும். அவர்களின் இயக்கத்தில் பல மதங்களையும் திருப்தி செய்வதையும் ஒரு கொள்கையாக கொண்டுள்ளார்கள். இவ்வித நிலைமையில் இருந்தமையால், ஒரு மதத்தை திருப்திசெய்ய புகுங்கால் மற்ற மதத்திற்கு சற்று பாதகமாகவே வந்து முடிகின்றன. பின்னர் எந்தமதத்தையும் திருப்தி செய்யமுடியாது அவஸ்தையுற்றுவருகின்றார்கள். அவ்வித அவஸ்தையின் காரணமாகவே தற்சமயம் பற்பல ரூபத்தோடு "வகுப்புவாத" அரக்கன் பிரசன்னமாகி இருக்கின்றான். இவ்வரக்கனை கொல்லவே சமதர்ம யுவர்கள் முன்வந்து நிற்கின்றார்: ஆனல் தேசியவாதிகளென்றால் மதப்பித்துக்கொண்ட சுயநலக்கிழங்கள்அவ்வரக்கனைக் தட்டிக்கொடுத்து வளர்க்க முற்படுகின்றனர்.

ஆதிமுதலே, தங்களின் இயக்கத்தில் மத பாதுகாப்பையோ, அன்றி அதை திருப்தி செய்யும் நோக்கத்தையோ கொள்ளாது நாட்டின் நன்மைக்கு எது பாதகமாகவும், தடைகளாகவும்நிற்கின்றனவோ அவைகளை வெட்டி வீழ்த்துவதென்றும், நாட்டின் முன்னேற்ற விஷயத்தில் எதையும் தியாகம் செய்வதென்றும்துணிந்திருந்தால் தற்காலத்தில் தோன்றியுள்ள கஷ்டம் தோன்றியிராது. ஒருக்கால் கோரிய பூர்ண லக்ஷியத்தையும் பெற்றிருக்க முடியும். இவ்வித இடுக்கண்களை எல்லாம் கண்ணாரக் கண்டமையினால், நீண்டகாள் அனுபவத்தாலும் உணர்ந்த வாலிப தேசியவாதிகள் பலர் துணிவுகொண்டு, தேசிய இயக்கத்தினின்றும் விலகி, மதத்தை அப்பால் ஒதுக்கித்தள்ள முற்பட்டுழைத்து வருகின்றார்கள். இதுவுமல்லாது சமதர்ம பிரசாரத்திலும் இறங்கியுள்ளார்கள். இவைகளை எல்லாம் கண்ணுரும் போது கூடிய விரைவில் சமதர்ம இயக்கம் இந்தியாவின் கண்ணேஸ்திரம் படஹேதுவாகும் போலும். உலகமே சோஷியலிசமென்னும் சமதாமக் கொள்கையைப் பின் தொடர்ந்து செல்லும் போது இந்தியாவிற்கு உணர்ச்சி இல்லாமலா போகும்! கீழ் காணும் துணுக்குகளிலிருந்து தற்காலத்திய வாலிப தேசியவாதிகள் எந்த நிலையை அண்மினவர்களாயிருக்கின்றார்கள் என்பதை அறிமின்!

தோழர் டாக்டர் முகம்மது ஆலம்.

"காளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகஎன் உள்ளத்தின்கண் வளர்ந்தோங்குவது என்னவெனில், துர்அதிர்ஷ்டம் பிடித்த நம்நாட்டிற்கு எவ்வித முன்னேற்றமும் கிடையா? எதுவரையில் என்றால் நாட்டுப் பிரஜைகளின் சுதந்திரமானது மத சம்பந்தப்பட்டிருக்கின்றனவோ அதுவரை இந்த மத சம்பந்தத்தினால்தான் வகுப்புவாதம் மக்களின் பால் மிகபலமாக வேரூன்றியுள்ளன. மதமே, மனிதர்களின் சுதந்திரத்திற்கு அடிப்படையானதென்பது இல்லாது தூரத்தும் காலம் மிக அண்மையிலேயே இருக்கின்றன. வகுப்பு வாதத்தை நாட்டை விட்டோட்டவும், நாட்டில் பொருளாதார சுதந்திரமும், கைத்தொழிலும் விருத்தியுற்றால்தான் நாட்டின் க்ஷேமம் பெருகும் என்றார்."

தோழர் பண்டித ஜவஹர்லால்.

"எனக்கு மதம் என்பது என் நாட்டு மக்களே, அன்னவர்களின் சுக ஜீவியமே எனக்கு சிறந்தமதம்" என்றும், "நான் மீண்டும் மத பக்தனாய் மாறுவேனேயாகில், நிச்சயம் யான் என நாட்டிற்கு பெரும்துரோகம் செய்தவனாவேன்" என்றார்.

தோழர் K. F. நரிமன்.

"யுவர்காள்! மதபக்தர்களும், வகுப்புவாதிகளும் என்றியம்பும் கூட்டத்தினர்கள், எல்லாம் சுயநலப்பித்தர்கள், மதத்தின் காரணமாய் ஏற்பட்ட வகுப்புவாதமே தற்சமயம் நம் நாட்டின் துரோகியாய் இருக்கின்றன, வருங்காலம் உங்களின் கையிலேயே சிக்கியுள்ளன, ஆகையால் இவ்வித சாபக்கேடு உண்டாகாதவாறு தைரியத்துடன் விரட்டியடியுங்கள்" என்று பம்பாய் மாணவரிடத்தில் பேசியுள்ளார்.

என் தோழர்காள்! இன்றைய வாலிப தேசாபிமானிகளென்போர் கூட மேலே புகன்றுள்ள நிலையை அடைந்துள்ளார்கள். வருங்காலம், மத சீர்திருத்தங்களினலோ அன்றி மதப்பிரசாரத்தினலோ வேறு மத சம்பந்தப்பட்ட எவ்வகையானுலோ

"சித்தக்காடு மாரியாத்தாளுக்கு உதை"
"உதைபட்ட மாரியம்மனுக்கு பிராயச்சித்தம்"

(S. K. R.)

சித்தக்காடு என்ற ஊர் மாயவரம் முனிசிபாலிட்டியின் ஒரு பாகம். அதாவது டவுனின்மேல் கோடியைச் சேர்ந்தது, மாயவரம் ஜங்ஷனும் இந்த சித்தக்காட்டில்தான் இருக்கிறது. இந்த ஊரில் பிரபலமான மாரியம்மன் கோவில் ஒன்று இருக்கிறது. இந்தப் பக்கத்து ஜனங்களுக்கு இந்த மாரியம்மன் தான் பிரபலமான தெய்வம். அந்த மாரியம்மா இடத்தில் ஜனங்களுக்கு இருக்கும் பக்தி மேலீட்டிலேயே மிகக்ஷீண திசையுடனிருந்த கோவில் இப்போது பலமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான ஒரு மாரியம்மா இருந்தும் சித்தக்காட்டைச் சுற்றிலும் சில காலமாய் வைசூரிநோய் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இந்த நோயால் சிலர் இறந்துவிட்டார்கள். சிலர் இறக்கும் தருவாயை எதிர்பார்த்துக்கொண்டுமிருக்கிறார்கள் வைசூரி வியாதியால் ஏற்படும் இந்த மோசமான நிலையில் பாமர மக்கள் பீதிகொள்வதில் ஆச்சரியமொன்றுமில்லை. இதனால் சித்தக்காடு மாரியம்மாவின் மனதைக் குளிர வைக்க அந்தப்பக்கத்து வாசிகள் நினைத்தார்கள். மாரியாத்தாளின் மனது குளிர்ந்துவிட்டால் வைசூரி நோய் பறந்துவிடுமென்று மனப்பால் குடித்த சித்தக்காட்டு வாசிகள், தங்கள் நிறைந்த பக்தியை பூர்த்திசெய்வான்வேண்டி சென்ற 1-4-34-உ ஞாயிற்றுக்கிழமை பகலில் கஞ்சி காய்ச்சி ஊற்றினார்கள். இரவில் கரகம் கட்டி வீதி வலம் வந்தார்கள். வழக்கம்போல் கோவில் பூசாரி கரகத்தை எடுத்து வீதிவலம் வந்துகொண்டிருந்தான். ஊர் ஜனங்களும் கரகத்தை சூழ்ந்துகொண்டு ஆரோக்கியசாமி ஆசாரி பட்டறையின் மேல் பக்கத்துச் சந்தில் கரகம் வந்துகொண்டிருந்தது. இந்தத் தெருவிலுள்ள ஒரு யௌவனப் பெண்மணி கரகத்திற்குத் தீவாரதனை எடுக்க நிவேதிய சாமான்களுடன் முன்வந்து நின்றாள். நிவேதியத் தட்டை நிவேதியம் புரியும் தனி பூசாரியிடம் கொடுத்துவிட்டு பிரசாதம் பெற்றுப்போக பிரஸ்தாபப் பெண்மணி நின்றுகொண்டிருந்தாள்.

கரகம் தூக்கிக் கொண்டிருந்த கோவில் பூசாரியானவன் தன் எதிரில் நிற்கும் பெண்மணியின் கையைக் கெட்டியாகப் பிடித்து பிசைந்துகொண்டு பின்வருமாறு சம்பாஷிக்கலானான்: —

"நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்! உனக்கு எவரும் லக்ஷியமில்லை. நான் இருக்கிற வரையில் உனக்கென்ன பயம் சொல்லு. உன்னை நான் வைத்து காப்பாற்றுகிறேன். உனக்கு எது வேண்டுமானாலும் தருகிறேன். நான் சொல்லுகிறபடி கேட்கிறாயா!"

என்பது போன்ற வார்த்தைகளே! நடந்தது. இச்சம்பாஷணை பெண்ணின் கையைபிடித்து பிசைந்துகொண்டபடியே முக்கால் மணிநேரம் நடைபெற்றது. கரகம்தூக்கிய பூசாரியானவன வாலிபவர்க்கத்தைச்சார்ந்தவன். கரகத்துக்கு நிவேத்தியம் செய்து போக வந்தபெண்மணியும் இளம் வயதைச் சேர்ந்தவள், எனினும் கரகத்தை சூழ்ந்து கொண்டிருக்கும் பக்த சிகாமணிகளெல்லாம் பிரஸ்தாப சம்பாஷணையை மாரியம்மன் சன்னதியின் பேரிலேயே நடப்பதாக கருதிக்கொண்டிருந்தார்கள். இது எத்தனையோ இடத்தில் நடந்தும் வழக்கத்தை ஒட்டியதால் இதைப்பற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லை.

இந்த சம்பவம் முடிந்து கரகம் கோவிலுக்குப்போய் இறங்கியது. இறக்கும்படி சடங்குகள் முறையே முடிந்ததும் வந்திருக்கும் பக்தர்களுக்கு காளாஞ்சி கொடுக்கும் சம்பிரதாயம் ஆரம்பமாயிற்று. கரகம் தூக்கிய பூசாரி ஒரு தட்டில் தேங்காய் மூடி, பழம் பாக்கு வெற்றிலை புஷ்பம் உள்பட விபூதி பிரசாதங்களுடன் மகா மண்டபத்தில் நிற்கும் பக்த கோடிகளான பொது ஜனங்கள் முன் தோன்றினான். நின்ற மகாஜனங்களில் முக்கியமானவர்களிடத்தில் காளாஞ்சி தட்டை சமர்ப்பித்தான். பெற்றுக்கொண்ட முக்கியஸ்தர்கள் பூசாரிக்கு மரியாதை செய்வான் வேண்டி ரூபாய் 1-7-0 கொடுத்தார்கள். இந்தத்தொகை வழக்கத்துக்குமீறியதாகவும், மிக கொஞ்சமாகவுமிருந்ததாக பூசாரி கருதினான். இது சமயமும் பிரஸ்தாப பூசாரியானவன் கரகமெடுத்து வீதிவலம் வருகிறபோதும் லேகிய உருண்டையை அளவுக்கு மீறி தின்றிருந்ததால்அவன்வீதி வலத்தில் வரும் போதும், கோயிலில் இறங்கியதும் தன் நிலை தடுமாறி எல்லா காரியத்திலும் அயோக்கியத்தனமாய் நடந்து கொண்டதாய் சொல்லப்படுகிறது. இது எப்படியாவது இருக்கட்டும். பக்தர்கள் மரியாதை செய்த ரூ. 1-7-0 பெற்றுக்கொள்ளாமல் தூக்கி எறிந்து விட்டான். வந்திருந்த பக்த கோடிகளை லேகிய உருண்டை வெறியால் வாயில் வந்த படிதிட்டின தோடு, கர்ப்பகிரகத்தில் அலங்காரத்துடனிருக்கும் மாரியம்மனை நோக்கினான். இவ்வளவு நாள் உனக்கு உழைத்தும் நீ எனக்கு ஒன்றும் செய்யவில்லை என்றான். நீ இருந்துதான் என்ன? தொலைந்துதான் என்ன? என்று பலவாறு சொல்லிக்கொண்டே ஆத்தாள் மகமாயியை நோக்கி 5-6-உதை காலாலேயே கொடுத்தான். மகமாயிக்கு செய்திருந்த அலங்கார புஷ்பங்களை எல்லாம்பிய்த்துநாலா பக்கமும் எறிந்தான். பூசாரியின் போக்கிரித்தனத்தைக் கண்ட பக்த கோடிகள் ஒன்றும் சொல்ல முடியாமல் தங்கள் தங்கள் வீடு திரும்பினார்கள். மறுதினம் தெருக்கூட்டம் போட்டு பூசாரியின் நடத்தையைக் கண்டிக்கப்பட்டது. கரகம் வீதி வலம் வரும்போது நிவேதிய மெடுத்து வந்த பெண்மணியின் கையைப் பிடித்து பிசைந்ததற்கும், மாரியம்மனை காலால் உதைத்து பக்த கோடிகளை அவமானப் படுத்தியதற்கும் ரூபாய் 25 அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் விதிக்கப்பட்ட தொகையும் வசூலாகி விட்டது. பூசாரி, மாரியம்மனை உதைத்ததால் ஏற்பட்ட தோஷத்தை போக்க மறுதினம் பிராமண குருக்களைக் கொண்டு பிராயச் சித்தம் செய்யப்பட்டது.

பூசாரி போதை வெறியால் செய்த போக்கிரித்தனமும் கஞ்சி காய்ச்சியும் கரகமெடுத்தும் ஊரைப்புழுதி பண்ணிய பக்த சிகாமணிகளின் லீலைகளும் எப்படியாவது போகட்டும் அதைப் பற்றி நாம் கவலைகொள்ளவுமில்லை.

வைசூரி நோய் அபிவிர்த்தியானால் பால் குத்திக்கொண்டால் பரவிக் கொண்டிருக்கும் நோயானது தடைப்பட்டு விடுமென்பது சுகாதார முறை. இதைப்பின்பற்றாமல் கரகம்கட்டுவதும், கண் முழிப்பதும், துள்ளுமாவு இடித்து தின்பதும், கஞ்சி குடிப்பதுமான காரியமுமெல்லாம் வைசூரி நோயுடன், காலரா நோயும் சேர்த்துக்கொள்ளச் செய்யும் முட்டாள் தன்மென்பதை புத்திசாலிகள் உணர்ந்த உண்மை. இதுவும் ஒரு பக்கமிருக்கட்டும்

சித்தக்காடு மாரியம்மன் கோவிலில் நடந்த பிரஸ்தாப நிகழ்ச்சியைக் கொண்டு குறிப்பாக சித்தக்காட்டு வாசிகளுக்கும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அதாவது:—

பொதுவாக மக்களுக்கும், சிறப்பாக பெண்களுக்கும் மாரியம்மன் என்ற ஒரு தேவதையிடத்திலிருக்கும் மூட பக்தி அளவு கடந்ததாகும். மாரி, காளி, பிடாரி, போன்ற தெய்வங்களிடத்தில் பெண்கள் கொள்ளும மூடபக்தியை தணிக்க வேண்டுவது அந்தந்த ஆண் மகனின் கடமையில் முக்கியமானதாகும். ஏனென்றால், பெண்களுக்கிருக்கும் பக்தியை ஒரு கருவியாக கோயில் பூசாரிகள் உபயோகப்படுத்திக் கொண்டு பெண்களை வசப்படுத்தி கற்பழிக்கவும எத்தனிக்கிறார்கள். கற்பழித்துமிருக்கிறார்கள். கோயில் பூசாரியை பக்தி சம்பாதித்துக்கொடுக்கும் பக்தன் என்ற பேதை எண்ணத்தால் எத்தனையோ பெண்கள் பூசாரியின் வலையில் சிக்கிவிடுகிறார்கள். முடிவாக மாரியம்மன தாசனத்துக்கு தங்கள் தங்கள் வீட்டு பெண்மணிகளை தனியாக அனுப்பிவைக்கும் ஆண் மக்கள் கவனித்து தக்கபடி நடந்துகொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தற்கால யுவர் உலகம் ஆசித்து நிற்கும் உன்னத ஒப்பற்ற சமதர்ம இன்ப லக்ஷியத்தை அடைய முடியா. மத சீர்திருத்த சம்பந்தமான சீர்திருத்தம் முற்றிலும் சுயநலபித்தர்களுக்கும், தனியுடைமைக்காரர்களுக்கும, பணக்காரர், புரோகிதர்கள்இவர்களுக்கு மாத்திரமேநன்மையைப் பயக்குமென்பது திண்ணம். வருங்காலத்தில் இந்தியா மட்டுமல்ல உலகமே சமதர்மத்தில் சிக்குண்டே "முத்தி"யடையும் என்பது தற்கால உலக நிகழ்ச்சியின் தன்மையை நுணுகிய ஆராய்ந்த அறிஞர்களின், அபிப்பிராயம். யுவர்களே சாத்வீக சமதர்மத்தை சித்திபெறச் செய்ய இன்றே முற்படுமின்.

ஜஸ்டிஸ் கட்சியின் அதிருப்தி நிலை.

(தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தற்காலத்திய நிலைமைதான் இத்தகையது என்றால் வருங்காலத்தின் கதி என்னவாகும்? தற்காலத்திய தலைமை முறையும், கட்சியின் நிலைமையும் என்பதுபற்றி நமது கட்சி உறுப்பினர் சிலரின் அபிப்பிராயத்தைக் கீழே குறிப்பிடுவது இன்றியமையாததாகும். சில மாதங்களுக்கு முன் தஞ்சையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் தோழர் மருதமுத்து மூப்பனார் கூறியதாவது:-

இன்றையதினம் சட்ட சபையிலும், வெளியிலும் ஜஸ்டிஸ் கட்சி என்று ஒன்று கிடையவே கிடையாது. தற்காலத்திய கட்சியை பொப்பிலி கட்சி என்றுதான் கூறவேண்டும். இக் கட்சியானது தேச அபிவிருத்தியிலோ, அல்லது பார்ப்பனரல்லாதாரின் உத்தியோக விஷயத்திலோ யாதொரு வேலையும் செய்யாமல் இருப்பது கண்டிக்கத்தக்கது. டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் மேற்கொண்டு ஆரம்பித்த சமூக சீர்திருத்தம் என்னும் கொள்கையை இன்று அடியோடு கைவிடப்பட்டுவிட்டது. அதன்பின்னர் வந்த ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் கூறியதாவது:-

"தற்காலத்திய ஜஸ்டிஸ் கட்சி அதிருப்திகரமான நிலைமையிலுள்ளது. பனகால் அரசருக்குப் பின்பு வந்த "தலைவர்கள்" என அழைக்கப்படுபவர்கள் கட்சியைத் தவறாக நடத்தித் தடுமாறிவிட்டார்கள். 1928-ம் ஆண்டிலிருந்து ஜஸ்டிஸ் கட்சி தலைவரின்றியே இருந்துவந்துள்ளது. இன்றும் அவ்வாறே இருக்கின்றது. நம் கட்சியின் தேவைகள் தற்போது இரண்டு. ஒன்று நமது கட்சியைப் புதுப்பித்தல், மற்றொன்று புதியதோர் தலைவரைத் தேர்ந்தெடுத்தல். இவைகள்தாம் நமது கட்சியில் கவனிக்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்களின் அபிப்பிராயம். இவை அனைவருக்கும் பொருத்தம் என்று கூறவேண்டிய அவசியமே இல்லை.

இறக்குந் தருவாயிலிருந்த "ஜஸ்டிஸ்" பத்திரிக்கையைக் காப்பாற்றிய பெருமையை பொப்பிலி அரசருக்குக் கொடுத்துவிடுவோம். ஆனால் நமது பத்திரிகை என்று சொல்லக்கூடிய இது நமது கட்சியின் பொது நலத்திற்காக யாதொரு நன்மையையும் புரிந்துவரவில்லையென்றால் அது மிகையாகாது. நமது கட்சியின் இரும்புத் தூண்கள்போலிருந்து உழைத்து வந்த அருந்தோழர்கள் சிவகெங்கை எஸ். இராமச்சந்திரன் அவர்களைப்பற்றியும், ஈ.வெ. ரா. நாகம்மாள் அவர்களைப்பற்றியும் ஒரு சிறு குறிப்பும் தன் வாயிலாக வெளியிட இப் பத்திரிக்கை மறுக்கும் என்றால், இது நமது கட்சிப் பத்திரிக்கை என்று எவ்வாறு கூறமுடியும்? இந்தூர் சமஸ்தானத்தில் இரண்டு விருந்துக்குமேல் ஒரு திருமணத்திலும் வைத்தல் கூடாதென சீர்திருத்தம் செய்தால் அதைக் கண்டித்துத் தலையங்கம் எழுதுகின்றது நமது ஜஸ்டிஸ் பத்திரிக்கை என்றால் இது பொதுமக்களின் நலத்திற்காகப் பாடுபடுவது என்று எவ்வாறு கூற முடியும்? ஆதிதிராவிடர்களில் ஒருவருக்கு கவர்னர் சபையில் ஏற்படப்போகும் காலிஸ்தானம் கொடுக்கப்பட வேண்டுமென்னும் தீர்மானத்தைப் பிரசுரிக்க மறுக்குமேயானால், இது தாழ்த்தப்பட்டவருக்கு உழைக்கும் தோழன் என்று எங்ஙனம் கூறுதற்கியலும்? இவ்வாறு கூறிக்கொண்டேபோனால் நீளும்.

இன்று நமது அருந்தமிழ்த் "திராவிடன்" கொலைசெய்யப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டு மந்திரிகள் தமக்கென்னவென்று இருக்கிறார்கள். "ஆந்திரராகிய தலைவர் "அறவம் எந்துக்கு" என்று ஆங்கிலப் பத்திரிக்கையையே கட்டியழுகிறார். இது நம் தமிழ் மக்களையே தாழ்மைப்படுத்தி கேவலப்படுத்தும் தன்மையது. உண்மை வீரரத்தம் நமது நரம்புகளில் ஓடுமேயானால் நாம் வாளாவிருத்தல் கூடாது. செட்டிநாட்டுக் குமாரராஜா இப் பத்திரிக்கையை போட்டிபோட்டு ஏலத்தில் வாங்கினாலும் இன்னும் கையைக் கட்டிக்கொண்டு சும்மாவிருத்தல் நமக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுகின்றது. பொதுத் தேர்தல் ஒரு ஆண்டிற்குமேல் ஒத்திவைக்கப்பட்டது என்று வாளாவிருப்பார்களானால் அவர்கள் ஓர் அரசியல் குற்றத்திற்கு ஆளாவார்கள் என்பதை அறியவேண்டும். தமிழ் மக்களே, உங்கள் ஊக்கம் எங்கே, உணர்ச்சி எங்கே, ஆக்கம் எங்கே, ஆர்வம் எங்கே? இன்றே விழித்தெழுங்கள் இல்லையேல்; என்றும் பழிக்கிடமாம்.

பீகார் பூகம்பம்

காந்தியர்களுக்குக் கற்பித்த கல்வி.

(தோழர் சே. தே. நாயகம்)

காந்தி இனத்தைச் சேர்ந்த மோகன்தாஸ் கரம்சந்தர், தீண்டாமையை விலக்குவதாக இப்பொழுது தானே மேற்போட்டிருக்கிற வேலையின் நடுவில், நம் நாட்டின் ஒரு சிறு பாகத்தில் பூகம்பம் உண்டாகவே, தீண்டாமையைக் கையாண்ட மக்களைத் தண்டிக்கக் கடவுள் பூகம்பத்தை அனுப்பினதாக முதலடியில் சொன்னார். அவரைப் போலவே மூட நம்பிக்கையிலாழ்ந்த தீண்டாமைப் பற்றுடையோர் தீண்டாமை விலக்க இவர் கொண்ட முயற்சிக்குத் தண்டனையாக அதே கடவுள் பூகம்பத்தை அனுப்பிவைத்தார் என்று சொன்னார்கள். முந்தியதைவிடப் பிந்தியது பொருத்தமுள்ளதாகத் தோன்றினும், இரண்டும் ஒப்பக்கூடாதவைகளே. தீண்டாமையைக் கையாண்டதற்காகத் தண்டித்தாரென்றால், தீண்டாமையைப் புகுத்தியபொழுதே தண்டனை செய்திருக்கவேண்டும். தீண்டாமை வாராதபடி, வந்தபின் பரவாதபடி, தடுத்திருக்கக்கூடும். தீண்டாமை நாடு முழுதும் பரவியிருக்க, அதன் பெருங் கொடுமை மலையாள நாட்டில் நிலைத்திருக்க, நாட்டின் ஒரு பகுதியினரை மாத்திரம் தண்டிப்பது பொருந்தாதது. தீண்டாமையை விலக்க முயன்றதற்காகப் பூகம்பம் கடவுள் தண்டனையென்றால், முயன்றவர்களையும் முயன்றவர்கள் இருந்த இடத்தையும் விட்டுவிட்டு, நாட்டின் ஒரு சிறு பகுதியில்மாத்திரம் வந்தது சரியல்லவே. இரு கூற்றுகளும் மடமையை அடிப்படையாகக்கொண்டோர் கொள்கையை வெளியிடுவனவாம். பூகம்பத்தால் காந்தியாரிடம் வந்த மாறுதலொன்று வெளிப்படையாகத் தெரிகிறது. சென்ற சில ஆண்டுகளாக ஆட்சியாளருடன் போர் தொடுத்திருப்பதாக ஓயாமற் சொல்லிக்கொண்டு, ஊரூராய்த் திரிந்து, ஏழை மனம் படைத்த மக்களை உதவா வழியில் உசுப்பிவிட்டுக்கொண்டிருந்த, இப்பெரியார் திடீரென அவர்களுடன் ஒருமைப்பட முன்வந்ததே அம் மாறுதலாம்! நீடித்த நாள் குற்றம் செய்த ஒருவன் குற்றம் உணர்த்தப்பட்டபின் அதற்காக மன்னிப்புக் கேட்டுத் தன் கன்னத்தில் அடித்துக்கொள்வது ஒரு இயற்கைச் செய்கை. அதற்கொப்பவே காந்தியாரும் ஆட்சியாளருடன் வணக்கத்துடன் ஒத்துழைப்பதாகப் பறையறைவித்தார். சொற்படியே செய்கையுமிருக்கிறது. பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு என்பது நீண்ட நாளாகக் கூர்ந்து நோக்கி, நுணுகி ஆய்ந்த, உண்மைப் பழமொழி. பார்ப்பானுக்கே பட்டால் தெரியுமென்றால், பார்ப்பனரல்லாக் கண்மூடி அடிமைகளுக்குப் பட்டாலும் தெரியாதென்று சொல்லலாமா, தாங்கள் பட்டால்மாத்திரம் போதாது, தங்கள் சொல்லை நம்பி ஏமாந்தவர்களும் சேர்ந்து பட்டால் தெரியுமென்று சொல்லலாமா? எது காரணமோ மோகன்தாஸ்கரம்சந்தர் [illegible] வணக்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென மனமாற்றங்கொண்டு வாயாரச் சொல்லி, செய்கையிலும் உறுதிப்படுத்தியதே. பூகம்பத்தால் வெல்லிங்டன் பிரபு அவரிடை கண்ட மாறுதல். 27-3-34 ல் சாப்ராவில் 30,000 மக்களைப் பார்த்து அவர் ஆற்றிய சொற்பொழிவில், முழுவதும் கடவுள் பாடமேயப்படியாமல், இயற்கையின் வெளிப்பாடுகளையும் சொன்னது இன்னொரு சிறுமாறுதல். பூகம்

தொடர்ச்சி 12-ம பக்கம் பார்க்க.

முக்கிய அறிவிப்பு.

ஏப்ரல் 1ந் தேதியிலிருந்து புக்போஸ்ட் விகிதம் அரை அணாவிலிருந்து முக்கால் அணாவாக உயர்ந்திருக்கிறது. அதாவது புக்போஸ்டிற்கு 5 தோலாவுக்குட்பட்டவைகளுக்கு முக்காலணாவும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 5 தோலாவுக்கும் அரை அணா வீதம் மேல் கொண்டும் ஸ்டாம்பு ஒட்டவேண்டும். அல்லாதவைகள் வாபீஸ் செய்யப்படும். (ப-ர்)

புரட்சி

ஈரோடு 1934- ஏப்ரல் மீ 8-உ

உணவுக்கு வரி.

—:0:—

பண்டை கால அரசுகள் முதல், தற்கால அரசுகள் வரையிலும், எல்லா அரசுகளும், உணவுக்கு வேண்டிய பொருள்கள் மேல் வரிகளைச் சுமத்தி, அவைகளின் விலையை உயர்த்தி வந்திருக்கின்றார்கள். இத்யாதி வரிகளை நியாயமென்றே எண்ணி வந்திருக்கின்றார்கள். இந்த வரிகளுக்கு நிலத்தீர்வையென்றும், ஜலத்தீர்வை யென்றும், சுங்கத்தீர்வை யென்றும் அழைக்கின்றார்கள். இவ்வரிகளைவிதித்துவரும் தற்கால அரசுகள் இவ்வரிகள் இயற்கையாக நியாயமானவைகளா? அநியாயமானவைகளா? என்று பகுத்தறிவைக்கொண்டு உணர்ந்தாரில்லை. ஏதோ ஆதிகால முதல் உண்பண்டம், தின்பண்டங்களின் மேல், வரி விதித்து வந்திருக்கின்றார்களாகையால், அந்தப் பழக்கத்தைப்போலவே, அந்தந்த சமயங்கட்கு ஏற்றவாறு பற்பல வரிகளை உணவுப்பொருளின் பேரில் விதித்து வருகின்றார்கள்.

தற்கால ஓர் முனிசிபாலிடியை எடுத்துக் கொள்வோம். எந்தெந்தப் பொருள்களுக்கு வரிகளை விதித்து வருகிறார்களென்பதை சற்று கவனிப்போம். பட்டணங்களில் வரி விதிக்கப்படாத உணவுப் பொருள்கள் யாதொன்றுமில்லை. பால் கொடுக்கும் பசுவுக்கு வரி, பதார்த்தங்களை விற்பதற்கு வரி, அவைகளை விற்கும் தொழிலுக்கு வரி, அவைகளை விற்கும் இடங்களுக்கு வரி, தோசைக்கடை முதல், நெய், சர்க்கரை, மளிகை, உப்பு, வெற்றிலை பாக்கு, சீனி, கற்கண்டு, பிஸ்கட், மிட்டாய், தினைமாவு, தேன் முதலிய சகலவித சொற்ப பண்டங்கட்கெல்லாம் முனிசிபல் வரி விதிக்கப்பட்டு வருகின்றன.

இத்யாதி வரிகளை நேரல்லாத வரிகள் என்று கூறுவார்கள். ஆனால், இவ்வித உண்பண்டம் தின்பண்டங்களின் மேல், நேரல்லாதவரிகளோடு, முக்கிய உணவுகளின் பேரிலும் வரி விதிக்கப்பட்டு வருகின்றன. அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு, பருப்பு முதலிய தானியங்களின் பேரிலும் பலவித வரிகளைச் சுமத்தி வருகின்றார்கள்.

அரசாங்கத்தாரால் விதிக்கப்படும் இத்யாதி வரிகளும் போதாமல், போக்கு வரத்துக்கு வேண்டிய வண்டி, ரயில், கப்பல், தோணி, படகு முதலியவைகட்கு சுமை வரியும் கொடுக்கவேண்டி வருகின்றது. இவ்வரிகளின் அக்கிரமத்திற்கு மேலான ஓர் வரி உண்டு. அவை நிலத்தீர்வை எனப்பெயர். இந்த நிலத்தீர்வை, நீர் வரியையும் சேர்ந்தது. விளையும் பொருள்களை விளைவிப்போன் ஒருவன், ஆனால், விளைவுக்கு வேண்டிய உழைப்புக்கு யாதொரு சம்மந்தமுமில்லாதவன், இந்நிலத்தீர்வையைக் கைகொள்ளுகின்றான். நிலத்தை இவன் கொண்டுவந்ததில்லை, இந்நிலத்தை ஓரிடமிருந்து மற்றொரிடத்திற்கு கொண்டு போகவும் முடியாது. கற்ப காலங்களாக, இந்நிலங்கள் இருந்தவிடத்திலேயே இருந்து வருகின்றன. மனிதன் உலகில் தோன்றுவதற்கு முன்னமே விளையும் நிலங்களிருந்து வருகின்றன. இந்நிலத்தை ஆதிகால முதல், தற்காலம்வரையில், மனிதனைத்தவிர, மற்றெல்லா ஜீவன்களும் பூமியின் மேல் விளையும் பொருள்களை அந்தந்த உயிர்கட்கு வேண்டிய அளவு வரி, விதி யாதொன்றுமின்றி, அனுபவித்து வந்திருக்கின்றன. ஆனால், மனிதரில் சிலரே இயற்கைக்கு விரோதமாக, விளைவுப் பொருளகளை யாதொரு உழைப்புமின்றி, அனுபவித்து வருகின்றார்கள். இதுதான் அக்கிரமத்திலும் அக்கிரமமான நிலவரி என்பார்கள். பட்சிகள் யாதொரு சட்ட திட்ட நிபந்தனைகளின்றி, விருட்சங்களில் உண்டாகும் கனிகளை, உண்டு வாழ்ந்து வருகின்றவை. புழு, பூச்சி, வண்டு, புல்லினங்கள் யாவும், தத்தமக்கு வேண்டிய பொருள்களை, வரிவிதிப்பின்றி, விளையும் பொருள்களை இலவசமாக உண்டு வாழ்ந்து வருகின்றன. கோடான கோடி வருடங்களாக, வரி, சுங்கம் இன்னும் பலவித சுமைகளின்றி, கோடான கோடி உயிர்கள் அனுபவித்து வரும் உணவுப் பொருள்களை, நேற்று உலகில் தோன்றிய மனிதன் ஒருவனே, மக்கள் போதுமானவரையிலும் உண்ணுவதற்கு முடியாமல் வரிச்சுமைகளை மேலும் மேலும் விதித்து வருகிறான். இந்தக் கொடுமை, மனிதனைத்தவிர, யாதொரு உயிர்களிடமுமில்லை. இது மனிதனால் உண்டாக்கப்பட்ட முதல் கொடுமை.

இந்தக் கொடுமையை விளைவிக்கவேண்டியதற்கு ஏதாகிலும், இயற்கையிலாகிலும், பகுத்தறிவிற்காகிலும் பொருத்தமுளதாவென்று பார்ப்போம். உணவுப் பொருள்களின் பேரில் வரிகளைச் சுமத்தி, அதன் விலைகளையும் உயர்த்தி மக்களின் உழைப்பின் பயனையும் குறைத்து, மக்களுக்குப் போதுமான உணவு கிடைக்கவொட்டாமல் செய்வது, என்ன தர்ம நீதி யென்று கேட்கின்றோம்? முக்கியமாக இந்த வரிச்சுமைகளால், பெரும்பான்மையான மக்கள் பயன் அடைந்தாலும், ஒருவாராக ஒத்துக்கொள்ளவிடமுண்டு. இவ்வரிகளின் பெரும்பான்மையான பயனை, சிலர்களே அனுபவிப்பார்களேயாமாகின், இதை எங்ஙனம் யுக்திக்குப் பொருந்தும்? இவ்வரிகளின் முழுப்பயனும் ராணுவத்திற்கும், உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கும், அனாவசியச் செலவுகளுக்கும், உபயோகப்பட்டுவருமாயின், இது எவ்வித நியாயத்திற்குப் பொருந்துமென்று கேட்கின்றோம்? ஒரு நாட்டுக்கு வரிகளின் மூலம் 160 கோடிவந்தால், அதில்மூன்றிலிரண்டு பங்கு, உணவின் பேரில் விதித்த நேரல்லாதவரியுமானால், அவ்வரியில், 50 கோடி இராணுவச் செலவுக்கும், மூன்று கோடி உணவுப் பொருளபிவிருத்திக்கும் செலவானால், இவ்வாறாகச் செலவழிப்பதை, என்ன மதியீனமென்று நினைப்பது?

உணவுப்பொருள்களின் பேரில் வரி விதிக்காமல், ராணுவத்தை எவ்விதம் காப்பாற்ற முடியுமென்பார்? அதற்கு, நமது நேரான விடை என்னவெனில், ராணுவத்தால் என்ன நன்மை என்று கேட்கின்றோம்? ராணுவப்படை இல்லாமல் போமாகில் தேசமாகிலும், உலகமாகிலும் தலைகீழாகக் கவிழ்ந்துவிடுமாவென்றும் கேட்கின்றோம்? வேற்றரசர்கள் நாட்டைப் பிடித்துக்கொள்ளுவார்களென்று எவர், சொல்கின்றார்கள். அதனால் பெரும்பான்மை மக்களுக்கு, தற்கால கஷ்டங்களைவிட, வேறு அதிகமான கஷ்டம் என்ன நேர்ந்துவிடுமென்று கேட்கின்றோம்? அல்லது, தற்கால சுகத்தைவிட, பெரும்பான்மை மக்கள், என்ன அதிகமான சுகத்தைப் பெறுவார்களென்றும் கேட்கின்றோம்? வயிற்றுக்கு எட்டாத உணவு கிடைக்காதிருக்கும் வரையில், இராமன் ஆண்டாலென்ன? அல்லது இராவணன் ஆண்டாலுமென்னவென்றும் கேட்கின்றோம்?

ராணுவ முதலிய சிப்பந்திகள் தேச தற்காப்பிற்கு இல்லாமற்போமாகில், உள்நாட்டில் குழப்பம், கொலை, களவு முதலிய சச்சரவுகள் உண்டாகுமென்பார்கள். ஏன்? வயிறுக்கு உணவு சரிசமத்துவமாக யாவருக்கும் தத்தம் உழைப்பின் பயனுக்கிடைக்குமாயின், மக்கள் எதற்காக குழப்பம் செய்வார்கள்? இவ்வளவு இராணுவ, சேவக சிப்பந்திகளிருந்தும், கொலை, களவு முதலிய உள்நாட்டுக் குழப்பங்கள், ஏன் உலாவுகின்றன? இந்தக் குழப்பங்களை அடக்க எத்தனை சிவில், கிரிமினல் கோர்ட்டுகள்? எத்தனை ஜட்ஜுகள், மாஜிஸ்டிரேட்டுகள்? எத்தனை வெட்டியான், தலையாரிகள்? இவ்வளவெல்லாமிருந்தும், ஒரு நாட்டின் ஜெயிலகளில் கொடுங்குற்றவாளிகள் ஆயிரம், பதினாயிரம் லட்சக்கணக்காக அடைபட்டுக்கிடப்பானேன்?

தேச தற்காப்பிற்கு சேனை, சிப்பந்திகளும், இராணுவப்படைகளும், கோர்ட்டுக் கச்சேரிகளும், ஜெயில், சப் ஜெயில்களும் அத்யாவசியமென வேண்டுமென்போர் கூறும் கூற்று, அறியாமையால் கூறும் கூற்றெனஅறிக! சண்டையும், போரும், கலகமும், குழப்பமும் உண்டாவதற்கு ஆதிகாரணமாக நிற்பது, பொருளாதார வித்தியாசத்தால் என அறிக! ஒருவனுக்கு இருந்து, மற்றவனுக்கு இல்லாமையே, எல்லாவித குழப்பங்களுக்கும் காரணகர்த்தாவாக நிற்பதென அறிக! நாட்டிலுள்ள மக்களுக்கெல்லாம், சரி சமத்துவமாக வாழ்க்கைத் திட்டம் ஏற்படுமாயின், ராணுவ சிப்பந்திகள் ஏன்? கோர்ட்டு கச்சேரிகள் ஏன்? கலகக் குழப்பங்கள் ஏன்? நாட்டு மக்களது சமூ

கும் உன்மத்த சமூகமாகா! ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, உடைத்தாயிருக்கும் கீழ்தர சீவராசிகள், பல கோடி ஆயிரம் வருடமாக, கோர்ட்டு கச்சேரியின்றி, ஜெயில், சப் ஜெயில்களின்றி, தத்தம் வாழ்வுக்கு வேண்டிய உணவைப் புசித்துக் கொண்டு, இன்று வரை வாழ்ந்து வருகையில், பஞ்சறிவுடைய மனிதன், யாதொரு அடக்கு முறை ஸ்தாபனங்களின்றி தனது சமூக வாழ்க்கையை ஏன் நடத்தமாட்டான்? அதுவல்ல காரணம் பஞ்சறிவுடைய மனித வாழ்க்கையில் ஓர் கொடுங்கோல் திட்டம் புகுந்து கொண்டிருப்பதால், இத்தியாதி கேடும், வினையும் மனித சமூகத்தில் நிறைந்துள! அதுதான் பொருளாதார வித்தியாசத் திட்டமாகும். அதுதான் ஒருவருக்கிருக்கும், மற்றொருவனுக்கு இல்லாதிருக்கும் திட்டமாகும். இந்தத் திட்டத்தைக் காப்பதற்கே, ஏற்பட்ட சேனை சிப்பந்திகளும், கோர்ட்டுக் கச்சேரிகளும், ஜெயில்களும், அடக்கு முறைகளுமேயல்லாமல், தேச நற்காப்பிற்குமல்ல. உள்நாட்டுக் குழப்பங்களை அடக்குவதற்குமல்ல. சரிசமத்துவமாக மக்கள் வாழ்க்கை நடத்துவதற்குமல்ல.

கோடிக்கணக்காக, கோடி வருடங்களாக, புழு, பூச்சி விலங்கினங்கள் யாவும் உணவுப்பொருள்களை தடையாதொன்றுமின்றி உண்டு களித்து வருவதால், அடக்குமுறைகளும் அடக்கு முறை ஸ்தாபனங்களுமின்றி, நீடூழி காலமாக வாழ்ந்து வருவதைப்போல், மக்களுக்கு வரி, சுங்கம் முதலிய கொடிய சுமைகள் இல்லாவிடில், மக்களும் இன்னும் பல்லாயிரம் கோடி வருடம் சுகித்து வாழ்வார்களென்பதற்கு சந்தேகமில்லை.

மக்கள் வாழ்க்கையில், காலப் போக்கிற்கொத்தவாறு, பற்பல நற்பழக்கங்களும், துற்பழக்கங்களும் உண்டாயின. அவைகளில், உணவுப் பொருள்களின் மேல் சிற்சில கற்பனை காரணங்களால் வரி சுமத்தப்பட்டு நாட்டில் வறுமை விளைய நேர்ந்தது. நாட்டிலுள்ள வறுமையையாகிலும் உலகிலுள்ள வறுமையையாகிலும், போக்க வேண்டுமானால், முதலில், உணவுப்பொருள்களின் மேல் ஏற்பட்டுள்ள எல்லா வரிச்சுமைகளும் நீங்க வேண்டும். இந்த நியாயம் இவ்வாறிருக்க தற்கால ராஜபங்கள், உணவுப் பொருள்களின் மேல் வரிகளைச்சுமத்துவது உன்மத்த மாகுமே யொழிய, மதியாகா!

ரோஜா முத்தையா

"பகுத்தறிவு"

சுயமரியாதை தினசரி.

நாளது 15-ந் தேதி ஞாயிறு முதல் 'பகுத்தறிவு' தினசரி வெளிவரும்.

சமய சமூக அரசியல் விடுதலைக்கு பரிந்து போராடும் தமிழ் தினசரி இது ஒன்றே. சர்வ தேச சம்மந்தமான விடுதலை போராட்டச் செய்திகள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும். விடுதலை வழிகாட்டிகளாகிய வீரர்களின் வாழ்க்கைச் சரித்திரங்கள் அடிக்கடி வெளிவரும். ஆணித்தரமான அபிப்பிராயங்களும், அழுத்தமான கண்டனங்களும், அவசியம் காணலாம்.

தனிப்பிரதி காலணா.

தபாலில் மாத சந்தா ஒரு ரூபாய்.

எல்லா இடங்களுக்கும் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

"பகுத்தறிவு" ஈரோடு.

நாகர் கோவிலில் சுயமரியாதைதோழர்கள்

ஜில்லா மாஜிஸ்டிரேட் தடையுத்திரவு.

போலீஸ் ரெகுலேஷன் 26-வது செக்ஷன் பிரயோகம்.

நேற்று 6-4-34 வெள்ளிக்கிழமை மாலை நாகர்கோவிலில் சித்திரா வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழா வைபவம் திருவாங்கூர் சட்டசபை அங்கத்தினரும், பிரபல அட்வகேட்டும், சுயமரியாதைத் தோழருமான நாகர்கோவில் பி. சிதம்பரம் அவர்களின் தலைமையில் நடந்தேறியது. இவ்வாண்டுவிழாவிற்கு சுயமரியாதைத் தோழர்களான ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், அ. ரெத்தின சபாபதி, காஞ்சீபுரம் சி. கே. குப்புசாமி முதலியவர்கள் அழைக்கப்பட்டு விஜயமாகியிருந்தார்கள். இவ்விழாவில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆண்டுவிழா ஆரம்பிப்பதற்கு முன்பு ஜில்லா மாஜிஸ்டிரேட்டான கனம் வில்வனாதய்யர் அவர்கள் நமது சுயமரியாதைத் தோழர்களான ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், அ. ரெத்தின சபாபதி, நாஸ்திக சி. கே. குப்புசாமி முதலியவர்களுக்கு போலீஸ் ரெகுலேஷன் ஆக்ட் 26-வது செக்ஷனைப் பிரயோகித்து கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாதவாறு தடையுத்திரவு பிறப்பித்துவிட்டார்.

பின்பு ஆண்டுவிழாவில் நாகர்கோவில் முனிசிபல் சேர்மன் தோழர் சிவதாணு அவர்களும் மற்ற தோழர்களான ஆறுமுகம், பூதலிங்கம், ராமசாமி, கிருஷ்ணன் முதலியபேர்களும் சமதர்ம லக்ஷியத்தைக் குறித்துப் பேசினார்கள். தோழர் முத்துகிருஷ்ணன் சமதர்மக்கீதங்கள் பாடினார். பின் தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் முடிவுற்றது.

(நமது நிருபர் தந்தி.)

கர்ப்பத்தடையின் அவசியம்.

வைத்தியர் மகாநாட்டில் அபிப்பிராயம்.

பாஞ்சால மாகாண 18-வது வைத்தியர் மகாநாடு சமீபத்தில் லாகூரில் கூடியது. லெப்டினென்டு கர்னல் எச். சாந்து மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில், கட்டாயமாக இந்தியாவில் கற்பத்தடை முறைகளை உடனே அனுஷ்டிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும், கர்ப்பத்தடை முறைகள் உடனே கையாளப் படாவிடில், ஜனத்தொகை அளவுக்கு மிஞ்சி விடுவதுடன் வேலையில்லாத்திண்டாட்டத்தின் நெருக்கடி இன்னும் அதிக மோசமாகப் போய் விடுமென்றும், பாஞ்சால மாகாண வைத்தியர் மகாநாடு இந்தப் பிரச்சினையை நன்றாய் கவனிக்க வேண்டுமென்றும் வற்புறுத்திப்பேசினார்.

—அ. பிரஸ்

மே—தினம்.

நாடுமுழுதும் கொண்டாட வேண்டும்.

தோழர்கள் அ. பொன்னம்பலனார் ப. ஜீவானந்தம் சுற்றுப்பிரயாணம்.

தோழர்கள் அ.பொன்னம்பலனார் ப. ஜீவானந்தம் ஆகியவர்கள் இருவரும் பெண்ணாடத்திலிருந்தும், ஈரோட்டிலிருந்தும் நாகர் கோவில் வடசேரிக்குப் பயணமானார்கள். வடசேரி சித்திராவாசிப்புசாலை ஆண்டு விழாவிற்குப் பிறகு 8-4-34ந்தேதியிலிருந்து நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மதுரை திண்டுக்கல் காரைக்குடி சிவகெங்கை, திருச்சி ஸ்ரீரங்கம், பொன்மலை முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து மே-தினம் கொண்டாட வேண்டுவதின் அவசியத்தைப்பற்றி பிரசாரம்செய்வார்கள். அவசியமான இடங்களில் மாலை பொதுக் கூட்டமும் நடைபெறக் கூடும்.

ஈரோடு சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

இவ்வூர் சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் ஆதரவில் சங்கத்தின் ஹாலில் "புரட்சி" ஆசிரியர்தோழர் ஈ.வி.கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் 5-4-34ந்தேதி மாலை 6மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். அதுசமயம் பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் "சமதியக்கவக்ஷியமும்-தினசரிபத்திரிகையும்" என்பதுபற்றி மிக விளக்கமாகவும், விரிவாகவும் பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்தது.

தோழர் கே. வி. அழகர்சாமி.

பட்டுக்கோட்டை தோழர் கே வி. அழகர்சாமி அவர்கள் சென்னையில் சென்ற மூன்று வாரங்களாக "சுயமரியாதைப் பிரசாரம் செய்து விட்டு அங்கிருந்து ஜோலார்ப்பேட்டை முதலிய விடங்களிலும் பிரசாரம் செய்துவிட்டு தோழர் எஸ். வி. லிங்கம் அவர்களுடன் 5-4-34ந்தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்தார். அன்று மாலை ஈரோட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு அன்றிரவே திருப்பத்தூருக்கு தோழர் எஸ். வி. லிங்கம் அவர்களுடன் சென்றார் அங்கு 6ந்தேதி நடைபெறும்பொதுக் கூட்டத்தில் பேசுவார். பின் தோழர்கள் எஸ். வி. லிங்கம், கே. வி. அழகர்சாமிமுதலியவர்கள் 8ந்தேதி சேலத்திற்குச் செல்வார்கள். அங்கிருந்து நேரே ஈரோடுவந்து சேருவார்கள்.

வேலூரில் மேதின விழா பிரசாரம்.

சுயமரியாதை தோழர்களான கே. வி. அழகர்சாமி, ஜோலார்பேட்டை வி. பார்த்தசாரதி, எஸ். வி லிங்கம் ஆகியவர்கள் 12-தேதி வேலூருக்கு விஜயமாகிறார்கள்.

நகரின் முக்கியமான இடங்களிலும், கோட்டை மைதானத்திலும் 13, 14, 15, ந்தேதிகளில் சுயமரியாதை சங்க ஆதரவில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். மே தின விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டியாதைப்பற்றியும், சமதர்ம திட்டத்தைப் பற்றியும் முறையே உபன்னியாசங்கள் நடைபெறும்.

அறிக்கை.

சென்னையிலுள்ள சுயமரியாதை சமதர்ம சங்கங்கள் (Socialist league பலப்படுத்துவதைக் குறித்தும், வரும் சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் சமதர்மப் பிரதிநிதிகளை அனுப்பவேண்டிய விஷயத்தைக்குறித்தும், சமதர்மத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி அதனை, உழைப்போரிடம் பிரசாரம் செய்யவேண்டியதைக் குறித்தும், சென்னையிலுள்ள சுயமரியாதை, சமதர்மச் சங்கங்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டம் ஒன்றைக் கூட்டி ஆலோசிக்க வேண்டியதன் நிமித்தம் திருவல்லிக்கேணி சௌத்பீச் ரோட்டிலுள்ள தோழர் சிங்காரவேலு அவர்கள் வீட்டில் நாளது ஏப்ரல் மீ 15உ ஞாயிற்றுக் கிழமை மாலை 5மணிக்கு கூட்டம் நடைபெறுமாதலால் அதற்கு ஒவ்வொரு சங்கத்தாரும் (தலைவர், காரியதரிசி உள்பட) தங்களின் பிரதிநிதிகளை அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எம். கே. அழகப்பா

மிகப் பெரிய புத்தகசாலை.

உலகிலேயே மிகப் பெரிய புத்தகசாலை ருஷியாவின் தலைநகரான லெனின் கிராட்டிலிருக்கிறது. ஒரே சமயத்தில் 5000-பேர் உட்காரலாம். அப் புத்தகாலயத்தில் 30-லட்சம் புத்தகங்கள் உள.

என்ன அக்கிரமம்!

உலகில் மிகவும் விலையுயர்ந்த நாற்காலி ரோமாபுரியிலுள்ள போப்பிடமிருக்கிறது. இவ்வாசனம் முழுதும் வெள்ளியும் தங்கமும் கலந்ததாம். விலை 18-ஆயிரம் பவுன்.

சேலம் ஜில்லா சங்க அமைப்புக் கூட்டம்.

இவ்வாரம் கூடுவதாயிருந்த சேலம் ஜில்லா சு. ம. சங்க அமைப்புக்கூட்டம் 22-4-34ந்தேதி ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

ரதம் பறிமுதலாயிற்று.

2-4-34ந் தேதி காலாரம் கோயிலுக்கருகில் போலீசாருக்கும், சனாதனிகளுக்கும் கலகம் நடந்து பல போலீஸ்காரர்கள் காயமடைந்தனர். எற்கனவே சனாதனிகளுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் தகரார் இருந்தபடியால், ஜில்லா மாஜிஸ்ட்ரேட் பிறப்பித்த 144-வது பிரிவுப்படி தடையுத்தரவையும் மீறி ஹிந்துக்கள் பல ஸ்திரிகளுட்பட ரதோற்சவம் நடத்த முற்பட்டபடியால், போலீசார் புகுந்து பூசாரியுட்பட 12 பேரைக் கைது செய்தனர். போலீசாரைப் பல சனாதனிகள் சூழ்ந்துகொண்டு அடித்ததால் பலர் காயமடைந்தனர். ரதம் பறி முதல் செய்யப்பட்டது.

ஸ்டாம்புகளில் பிரிவு தபால் ஸ்டாம்பு வேறு ரேவினியூ ஸ்டாம்பு வேறு.

1934-ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து பர்மாவைத்தவிர இதர எல்லா மாகாணங்களிலும் ஸ்டாம்புகள் ரெவினியூவுக்கு வேறும், தபாலுக்கு வேறுமாகப் பிரிக்கப்பட்டு விடும. $\frac{1}{4}$,1,2, 4. அணா தபால் ஸ்டாம்புகளில் 'இந்தியா போஸ்டேஜ்" என்று போடப் பட்டிருப்பதையே தபாலுக்கு உபயோகப்படுத்த வேண்டும், "ரெவினியூ" என்று போடப்பட்டிருப்பதைத் தபாலுக்கு உபயோகப் படுத்தக்கூடாது. இதர காரியங்களுக்கு அது உபயோகமாகும். பர்மாவில் மட்டும் ஒரே ஸ்டாம்பு தான் இரு காரியங்களுக்குமாகும். இந்தியாவில் இது பிரிக்கப்பட்டு விட்டது.

அரிசியில் 2000 வகை கோயமுத்தூரில் மட்டும் ஆயிரம் தினுசு அரிசி.

கோயமுத்தூர் விவசாயக் காலேஜைச் சேர்ந்த தோழர் கே. ராமையப்பா பெங்களூர் நகர செண்டிரல் காலேஜில் ஆற்றிய சொற்பொழிவொன்றில் பின் வரும் முக்கியப் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டினார் உலக முழுவதும் 5கோடி 90 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் மட்டும் 3 கோடி 30 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. சென்னை மாகாணத்தில் 50லட்சம் டன் அரிசி விளைகிறது. பெரும்பாலும் உலக ஜனத்தொகையில் பகுதி அரிசியையே உணவாகக் கொண்டிருக்கிறது. அரிசி முதன் முதல் ஆசியாவில் பயிர் செய்யப்பட்டது அரிசிக்குத் தாயகம் இந்தியாவும் சீனாவும் தான். ஆசியாவில் மட்டும் அரிசி வர்க்கங்களில் 2000 தினுசுகள் இருக்கின்றன. கோயமுத்தூரில்மட்டும் 1000வெவ்வேறுவகையான அரிசி உற்பத்திசெய்யப்படுகிறது.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பநாட்டில் நடமாட நடமாட, இம் மாறுதல உரம்பெற்றுப் பெருகலாம். மறுநாள் துரைத்தனப், பூகம்ப வேலையைப் பார்த்தபொழுது, செலவுசெய்த ஒவ்வொரு சிறுகாசுக்கும் ஒழுங்காக ரசீது வாங்கியிருந்ததைப் பார்த்து மெச்சினாராம். இவ்வறிவு இன்னும் முன்னரே வந்திருந்தால், பல்லாயிரம் மக்கள் திண்டாட்டத்திற்கு ஆளாகியிருக்கமாட்டார்கள். ஊருராய்வெறிநாய் போலலைந்து, குழந்தை, நோயாளி கிழவரென்ற வேற்றுமையின்றிக் கண்டவர்களையெல்லாம் கடிக்குமாறுபோல் ஒருநேரச் சோற்றுக்கும் வழியின்றியிருந்த வறியவர் பணத்தை எல்லாம பிடுங்கிக்,கோடிக்கு மேலாகத் திரட்டிக், கணக்கு வழக்கின்றிப்போனவிடந் தெரியாமல் டணத்தையெல்லாம் பாழாக்கிச் சோம்பேறிகளைக் கொழுக்க வைத்ததன் கொடுமை இப்பொழுதேனும் அவர் மனதில் பட்டதோ, வினையில் பதிவோ தெரியவில்லை. கடுங்கட்டுப்பாடுகளும், முழு மனதுடனும் ஒற்றுமையுடனும் உழைப்பதை மெச்சி, அவருடன் வணக்கத்துடனும் ஒத்துழைப்பதாகவும் தெரிவித்தாராம். காங்கிரசாருக்கு எள்ளளவும் குறையாத அன்புடனும் ஆர்வத்துடனும் அவர்களுக்கு எவ்வளவோ மேலான திறமையுடனும் அறிவுடனும், தன்னலமின்றியும் ஊண் உறக்கமின்றி உழைக்கிற ஆட்சி ஊழியர்கள் இருக்கிறார்கள் என்று அவருக்குத் தெரியவந்தது பூகம்பத்தால் அவர் பெற்ற பெரும்பேறு.

2. இந் நன்மனப் போக்கில் கதரைக் கட்டி. அழுவதைவிட்டு மக்களை நேர் வழிப் போக்கிற்கு விடுவாரா, என்ற எண்ணம் தோன்றுகிறது. அல்லது பம்பாய்நாட்டிலுள்ள பருத்திச் செடிகளுக்கெல்லாம் ஒருமிக்க ஒருபெரு நோய்தோன்றி, ஜப்பான் நூலுக் துணியுமின்றி நம் மக்களுக்கு உடையில்லையென்ற காலம்வந்து, கடவுளின் மாபெருங் கருணையையும், திருவிளையாடல்களையும் வாழ்த்தி, மக்களை மங்கவைக்குங்காலம் வரவேண்டுமாவென மனப் பதட்டம் உண்டாகிறது. இன்னும் பட்டுத்தான் தெரியவேண்டுமா, படுமுன்னமே தெரியலாகாதா, என்றும் மனம் பறையடிக்கிறது.

3. நிற்க, நம்நாட்டு ஆட்சியில் மக்களுக்கு உரிமையைக் கூட்ட ஒரு புறம் உழைக்க, அதற்குக் கேடுறுவோர் தொகை இங்கிலாந்தில் பெருகுவதாக, 29-3-34 ல் வந்த தந்திச் செய்தியால் தெரிகிறது. அவர்கள் சொல்லும் ஒரு பெருங்காரணம், காங்கிரஸ்காரர் ஆட்சித் திருத்தத்தை விரும்பவில்லையென்பதே. காங்கிரஸ் பெயரால் இந் நாட்டிற்கு வெளியில் தீங்கிழைத்த காந்தியவர்கள் இனி மேலாவது நன்வழி திரும்புவார்களா? அல்லது அவர்கள் பட்டுத் தெரிய நாட்டிற்கு இன்னொரு கண்கூடான மாபெருங்கேடு வரவேண்டுமா?

6-ந் தேதியிலிருந்து 13-ந் தேதி வரையில்

பார்ப்பன தேசிய தினமா? தெருநாய் தினமா?

செத்த காங்கிரஸ் பெயரை, சுயராஜ்ய கக்ஷியின் பேராலும், தேசியத்தின் பேராலும், மீண்டும் உயிர்ப்பித்துவிடப் பார்க்கிறார்கள். ஆனால் தோழர்களே! தேசிய வாரத்தில் திக்கிரையாக்குங்கள் பாழும் பார்பனீயத்தை!

சுதந்தரக்கூத்து.

(சாமி. சிதம்பரனார்)

(இராகம்—வராளி. தாளம்—ஆதி)

பல்லவி.

பாடுவோமே—துள்ளிப்—பாடுவோமே
பகுத்தறி வுணர்ச்சியைப் பெற்று விட்டோமென்று
[பாடுவோமே]

சரணங்கள்.

1. எங்குஞ்சென்று சுதந்திர
நாதஞ் செய்வோம்—நாம்
எல்லோரும் ஒன்றெனவே
போதஞ் செய்வோம்
இங்குறையுஞ் சோம்பேறி
வாழ்க்கை போக்கி—மிக
இன்பமுடன் வாழ்ந்திருக்கும்
வாழ்வை யாக்கி [பாடுவோமே]

2. பொய்மொழிகள் பேசுவோரின்
வாழ்வு போச்சே—தர்ப்பைப்
புல்லினுக்குப் பணிவோரின்
தாழ்வு போச்சே
மெய்மொழிகள் பேசுவோரின்
வாழ்வும் ஆச்சே—இந்த
மேதினியில் எங்குஞ்சம
வாழ்வும் ஆச்சே [பாடுவோமே]

3. அறிவுக்கும் உழைப்புக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
அயர்ந்திங்குக் கிடப்போரை
நிந்தனை செய்வோம்
உரிமைக்கும், உதவிக்கும்
உயிரை யளிப்போம்—உலகில்
உண்மைச்சம தர்மமெங்கும்
ஓங்க வைப்போம் [பாடுவோமே]

4. மூடுபனி போன்றமதக்
கூட்டம் எல்லாம்—இங்கு
மூண்டபகுத் தறிவென்னும்
சூரியன் முன்னே
ஓடியொளிக் கின்றஒரு
காட்சி கண்டோம்— உண்மை
ஓங்கிவளர் விஞ்ஞான
மாட்சி கண்டோம் [பாடுவோமே]

5. ஏழையர்கள் என்பவரை
இகழ்வு செய்வோம்—பெரும்
எஜமானர் என்பவரைப்
புகழ்வு செய்யோம்
ஏழையர்கள் எஜமானர்
என்னும் பேச்சே—இங்கே
இருப்பதற்கும் இடமின்றி
ஏகச் செய்வோம் [பாடுவோமே]

6. சாதியழிந் தோடுகின்ற
காலம் வந்ததே—கெட்ட
சமயமழிந் தோடுகின்ற
காலம் வந்ததே
ஆதியழிந் தோடுகின்ற
காலம் வந்ததே—நல்ல
அறிவுவளர்ந் தோங்குகின்ற
காலம் வந்ததே [பாடுவோமே]

7. சாத்திரங்கள் பொய்மொழியே
என்ப தறிந்தோம்—அவை
சஞ்சலங்கள் தந்தனவே
என்ப தறிந்தோம்
ஆத்திரங்கொண் டவையெல்லாம்
தீயில் எரிப்போம்—பெரும்
அன்புப்பயிர் ஓங்கிடவே
எங்கும் வளர்ப்போம் [பாடுவோமே]

8. உலகத்துப் பொருளொன்றே
என்பதறிந்தோம்—அதுவே
உழைக்கின்ற நம்முடைமை
என்பதறிந்தோம்
நலமற்ற வஞ்சகரின்
சூதை யழிப்போம்—சற்றும்
ஞானமில்லார் செய்கொடுமை
போக ஒழிப்போம் [பாடுவோமே]

9. தந்நலமே கொண்டுறைதல்
மிருக வாழ்வே—அதனைத்
தவிர்ந்தினிது வாழ்வதுவே
மனித வாழ்வே
இந்நிலத்தில் என்னுடைமை
என்ப தொழிந்தே—செல்வம்
எவருக்கும் பொதுவாகும்
என்ப தறிந்தே [பாடுவோமே]

10. கண்ணுமனங் காயங்கட்கும்
எட்டா ஒன்றே—இந்தக்
காசினியில் வாழுவோரை
ஆட்டுமென்றே
மண்ணுலக வாழ்வுபோக
வார்த்தை பேசி—நம்மை
மயங்கவைக்கும் குருவென்போர்
வஞ்சம் போக்கி [பாடுவோமே]

உலகத் தொழிலாளர் தினமாகிய மே தினத்தைக் கொண்டாடுங்கள்.

திருச்சி சுயமரியாதைச் சங்க நிர்வாகக்கமிட்டி கூட்டம்.

1-4-34 ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருச்சி சுயமரியாதைச் சங்க நிர்வாகக் கமிட்டி கூட்டம் ஷை சங்கக் காரியாலயத்தில் தோழர் டி. என். தங்கவேலு அவர்கள் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானங்கள்

1. சங்க காரியலாய கட்டிட வாடகைக்கு ரூ 5-8-0-க்கு தோழர்கள் டி. சம்பந்தம் ரூ1-0-0 டி. எ. தங்கவேலு ரூ1-0-0, பி. நடராஜன் 1-0-0, எஸ். வி. கிருஷ்ணன் ரூ1-0-0, டி. ஆர். வெங்கிடாசலம் ரூ0-8-0, ஆர். இரத்தினவடிவேல் 0-8-0, கே. வெங்கிடாசலம் 0-8-0 ஆக ரூ5-8-0 பிரதி தமிழ் மாதம் 5தேதிக்குள் சித்திரை மாத முதல் கண்டிப்பாய் செலுத்துவதென தீர்மானிக்கிறது.

2. திருச்சியில் சென்ற சுமார் 20 நாட்களாக பூரி சங்கராச்சாரி பல கூட்டங்களில் பகுத்தறிவிற்கு பொருத்தமற்ற முறையிலும், பார்ப்பனீயத்தையும், மூடப் பழக்க வழக்கங்களையும் பிரசாரம் செய்து தமிழ் மக்களை இழிவுப்படுத்தும் முறையில் நடந்து கொள்ளுவதால் ஷை கூட்டத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன், பொதுமக்கள் ஷையாரை பஹிஷ்கரிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கிறது.

3. சென்னை சர்க்கார் சமீபத்தில் காலியாகும் சட்ட மெம்பர் பதவிக்கு சர்.கே. வி. ரெட்டி அவர்களை நியமித்ததற்காக இக் கூட்டம் பாராட்டுகிறது எனவும் தீர்மானிக்கப்பட்ட பின் காலை 8-30மணிக்கு கூட்டம் முடிவடைந்ததென' காரியதரிசி டி. சம்பந்தம் எழுதுகிறார்.

சூலூர் சுயமரியாதை இளைஞர் சங்கம்.

1934-ம் வருஷ வேலைத்திட்டக் கூட்டங்கள்.

17-3-34ந்தேதி மாலை 7மணிக்கு கோவை ஜில்லா சூலூர் மாரியம்மன் கோவில் மண்டபத்தில் சங்க மெம்பர்களின் கூட்டம் தோழர் எஸ். எல். எஸ். மணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் எஸ். கே முத்தப்பா சுயமரியாதைக்கீதம் பாடின பின்பு அடியிற் கண்ட தீர்மானங்கள் பலத் தவிவாதத்திற்குப்பின் ஏகமனதாக நிறைவேறியது.

சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள்.— தலைவர் தோழர் எஸ். எல். எஸ். மணியம், உபதலைவர் தோழர் எஸ். கே. கருப்பணன், உதவி காரியதரிசி தோழர் சுப்பம்மாள், நிர்வாக மெம்பர்கள் தோழர்கள் சி. எஸ். அங்கப்பா, எஸ். எம். கந்தசாமி, எஸ். கே. சுந்தரப்பா, மூ. கா. கருப்பணன், எஸ். வி. அப்பாஜி, கே. சுந்தராஜம்மாள், எஸ். கே. சுப்பணன், எஸ். எஸ். வி. ராமு, சௌந்தரம்மாள், டி. கே. வேலுச்சாமி, எஸ். ஏ. மாணிக்கம், எஸ். பி. கருப்பணன், எஸ். பி கே. தேவர் கே. கமலம் அங்கமுத்தம்மாள், எஸ். டி. சம்பந்தம் முதலியவர்களும் நடப்பு வருஷத்திய சங்க நிர்வாகச் செலவிற்காக அடியிற்கண்டவர்கள் நன்கொடை கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். தோழர்கள் எஸ். எல். எஸ். மணியம், எஸ். கே. கருப்பணன், கே. கிருஷ்ணன், கே. சுப்பம்மாள சி. எஸ். அங்கப்பா எஸ். வி. அப்பாஜி, எஸ். கே. சுந்தரப்பா, கே. சுந்தராஜம்மாள், எஸ். எஸ். வி. ராமு, எஸ். ஏ. மாணிக்கம், கே. கமலம், ஊ. கி. நஞ்சப்பா, முதலானவர்கள் 10 ரூபாய் வீதமும், தோழர்கள் மூ. கா. கருப்பணன், எஸ். எம். கந்தசாமி, அங்கமுத்தம்மாள் ஆகியவர்கள் 5-ரூ வீதமும், தோழர்கள் டி. கே. வேலுச்சாமி, பி. சௌந்தரம்மாள் ஆகிய இருவர்களும் 3-ரூ. வீதமும்- தோழர் எஸ். டி. சம்பந்தம் ரூ. 4ம், தோழர் எஸ். கே. அப்பாஜி ரூ. 6ம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இத்தீர்மானங்களுக்குப்பின் தோழர் எஸ். கே. முத்தையா சுயமரியாதைக்கீதம் பாட, கூட்டம் 9-30 மணிக்கு கலைந்தது.

24-3-34 ந்தேதி மாலை 7மணிக்கு இவ்வூர் யூனியன் பஞ்சாயத்துப் போர்டு ஆபீஸுக்கு சமீபத்தில் தோழர் முருகையா ஆசாரி கட்டிடத்தில் சங்கத்தலைவர் எஸ். எல். எஸ். மணியம் அவர்கள் தலைமையில் கூடியகூட்டத்தில்நிறைவேறிய தீர்மானங்கள்:- கட்டிடத்தை நடப்பு வருஷத்தித்திற்கு 12 ரூ. வாடகைக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

சங்கத்திற்கு தோழர்கள் எஸ். எல் எஸ். மணியம் ஒரு அலமாரியும், ஊ. கி. நஞ்சப்பா ஒரு அலமாரியும், இனாமாகக் கொடுத்ததற்கு இச்சங்கம் நன்றி செலுத்துகிறது.

இத்துடன் கூட்டம் 9மணிக்கு கலைந்தது. 31-3-34ந்தேதி மாலை 7மணிக்கு சங்கக் கட்டிடத்தில் தலைவர்தோழர் எஸ். எல். எஸ். மணியம் தலைமையில் கூடிய கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்:—

சங்க மெம்பர்களின் கூட்டம் வாரந்தோறும், சனிக்கிழமை பகல் 2மணிக்கு கூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பொதுக்கூட்டம் மாதந்தோறும் இருமுறை கூட்டப்பட வேண்டுமென்றும், டை கூட்டங்களை நடத்தி வைக்க தலைவர் தோழர் சி. எஸ். அங்கப்பா, தோழர் எஸ். கே. சுந்தரப்பா, தோழர் எஸ். பி. கே. தேவர், காரியதரிசி ஆகிய ஐந்து பேர்களைக் கொண்ட கமிட்டிக்கு இக்கூட்டம் அதிகாரம் கொடுக்கிறது.

சங்கத்தின் லைப்ரெரி நிர்வாகத்தை, கமிட்டி மெம்பர் தோழர் எஸ். பி கே. தேவர் அவர்களைப் பார்த்து வரும்படி இக்கூட்டம் அதிகாரம் கொடுக்கிறது.

இயக்கக் கொள்கைகளை இவ்வூரில் செய்கையில் நடத்தி வைக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி, இன்னும் சில தீர்மானங்கள் பலத்த விவாதத்திடையே நிறைவேறினபின் கூட்டம் 9மணிக்கு இனிது கலைந்தது.

நாஸ்திக சமதர்மி.

சூலூர் கே. கிருஷ்ணன் மகனுக்கு நாஸ்திக சமதர்மி என்ற பெயரிட்டு சூலூர் போர்டு ஆண் எலிமெண்டரி பாடசாலையில் ஜாதி மதம் ரிஜிஸ்டரில் பதிவு செய்யாமல் சேர்க்கப் பட்டது.

பாடசாலையின் ஹெட்மாஸ்டர் ஆகிய பார்ப்பனர், ஜாதி மதம் இல்லாமல் சேர்க்க முடியாது என மறுத்து மேலதிகாரிகளுக்கு சேர்க்கை விண்ணப்பத்தை அனுப்பி விண்ணப்பதார் விருப்பத்தின் படி சேர்த்துக்கொள்ள உத்திரவு கிடைத்த பின்பு சேர்த்துக் கொண்டார்.

பெண்ணாடத்தில் சமதர்மப்பிரசாரம்.

பெண்ணாடம்—திட்டக்குடி சுயமரியாதைத் தோழர்களான சி. முனிசாமி, பி. நாராயணன் இவர்களது முயற்சியால் பெண்ணாடம் வே எம். குமாரஹாலில் 4-4-34உ-புதன்கிழமை மாலை 5-30மணிக்கு பெண்ணாடம் சப்ரிஜிஸ்டார் தோழர் வி. ரெங்கராஜா அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு உள்ளூர் விருத்தாசலம், திட்டக்குடி, அரியலூர் ஆக்கனூர் முதலிய இடங்களிலுமிருந்து பெருந்திரளான தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அவற்றுள் முக்கியமானவர்கள் வருமாறு:- தோழர்களான சி. முனிசாமி, பி. எஸ். ரெங்கசாமி, சக்கரபாணி, பி. நாராயணன் (வைஸ் பிரசிடெண்ட் யூனியன் போர்டு) கண்ணபிரான் வேள், (தமிழ் பண்டிதர்) ராமசாமி, ஏ. மெத்துசலா. சக்கரவர்த்தி, கிருஷ்ணன் (வக்கீல்,) ராமசாமி, கே. எம். வரதராஜலு, கே. பெருமாள் முதலியவர்களாகும்

தலைவர் முன்னுரையாக பொதுக் கூட்டத்தின் அவசியத்தைப்பற்றி மிகத்தெளிவாக எடுத்துக் கூறினார்.

பிரபல பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "சமதர்மம,-படமுடியாதினித்துயரம்" என்பது பற்றி சுமார் 2-30மணிவரை மிகவும் விளக்கமாகவும், விரிவாகவும் பேசினார்.

அதன் பிறகு சு. சக்கரபாணி அவர்கள் நன்றி கூறுமுறையில் சில வார்த்தைகள் சொன்னார்.

தலைவர் முடிவுரையாக பிரசங்கத்தையொட்டி தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்து சுயமரியாதை இயக்கத்தார் கூறும் கொள்கைகள் யாவும் இன்று நமது நாட்டு மக்கள் பின் பற்றக் கூடியதும், மக்கட்கு எல்லாத்துறைகளிலும் விடுதலை தரத்தக்கதுமாகும் என்று பேசினார்.

இத்துடன் இரவு 8-30மணிக்கு கூட்டம் முடிவடைந்தது.

தோழர் அ. பொன்னம்பலம் நாகர் கோவில் பயணமானார்.

1-வது குரு குல மகாஜன மகாநாடு.

குரு குல மரபைச்சார்ந்த வேட்டுவக் கவுண்டர்கள், மகாநாடு ஒன்று கூட்டுவதுபற்றி ஆலோசனை செய்ய அப்பச்சிமார் மடத்தில், 31-3-34 இரவு 8மணிக்கு தோழர் எம். ஏ. ஆண்டமுத்துக்கவுண்டர் அவர்கள் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்காணும் முடிவுகள் செய்யப்பட்டன.

உபசாரக்கமிட்டி நிர்வாகஸ்தர்களாக,

தலைவர்:—தோழர்எம், ஏ. ஆண்டமுத்துக்கவுண்டர்.

காரியதரிசி:—தோழர்கள் எம். ஏ. தெய்வசிகாமணிக்கவுண்டர். பி. ஏ. பி. எல். தேவணகவுண்டர் தென்னிலைப்பட்டக்காரர் ஏ. சி. பழனிசாமிக்கவுண்டர், வி. எம். முடுதுறைகிராமம், அமராவதிக்கவுண்டர் வி. எம். கவுண்டம்பாளையம், மாரப்பகவுண்டர்.

குருகுல மகாநாடு

அப்பச்சிமார் மடத்தில் மேமீ முதல் வாரத்தில் கூட்டப் பெரும் டை மகாநாட்டைத் திறந்து வைக்க சென்னை அரசாங்க முதன் மந்திரி கனம் பொப்பிலி இராஜாவை அழைப்பதெனத்தீர்மானிக்கப்பட்டது.

இறந்தவரை எழுப்பும் டாக்டர்

சமீபத்தில் மின்சாரத் தாக்குதலினால் ஹிருதயம் தடைபட்டு உயிரிழந்த ஒருவனை, சோவியத் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவிலுள்ள பிரபல அறிஞர் அலெக் ஜாண்டர் ஸ்மிர்னாவ் ஆபரேஷனும் இஞ்செக்ஷனும் செய்து உயிர்ப்பித்து விட்டார். அவர் அதைப்பற்றி ஒரு பத்திரிக்கை நிருபரிடம்தெரிவித்த விவரம் பின்வருமாறு:—"நான் மரணத்துடன் சதுரங்க விளையாட்டு விளையாடி வருகிறேன். இன்னும் என் சதுரங்க விளையாட்டு ஒரு முடிவுக்கு வரவில்லை. இன்னும் நான் முயற்சித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஹிருதய சம்பந்தமான குறையினால், பல ஹீனத்தால் நோயினால் மரணம் ஏற்படுமென்று கூறுவதில் என்னைப் பொறுத்த வரையில் எனக்கு நம்பிக்கை இல்லை. அதிக வேலை செய்ததனால் ஹிருதயம் களைப்படைந்து விட்டதாலோ, கொடிய பயங்கரமாக நெஞ்சு திடுக்கத்தினால் ஹிருதயம் நின்றுவிடுவதனாலோ, மின்சார அதிர்ச்சியினால் ஹிருதயம் நின்றுவிடுவதினாலோ மரணம் ஏற்பட்டு விட்டால் அந்த இருதயத்தைச் செயற்கை முறையால் மீண்டும் துடிக்கச் செய்து விடலாம் என்பது என் ஆராய்ச்சியின் முடிவாக இருக்கிறது. ஆனால் இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. இறந்துபோனசவம் விறைத்துக்கொண்டு விடுவதற்கு முன்னால் அந்தச் சவத்தை ஆபரேஷன் செய்துவிட வேண்டும்."

கொள்ளைக்காரச் சீனப்பெண்

தெற்கு சீனாவின் கடற்கரையோரத்தில் ஒரு பெண் கொள்ளைக்காரி பல சிறு படகுகளைக் கொண்டு கடற்கரையோரமுள்ள கிராமங்களைக் கொள்ளை யடித்துவருகிறாள். அவளிடம் ஏராளமான ஆண் பெண் கொள்ளைக்காரர்கள் இருக்கின்றனராம்.

திருநெல்வேலி ஜில்லா திருவள்ளுவர் சமூக சீர்திருத்த சங்கத்தின் 2-வது ஆண்டு நிறைவிழா.

விக்கிரமசிங்கபுரம்.

14-4-34 சனிக்கிழமை காலை 9 மணிக்கு அடிவாரம் எலிமெண்டரி பாடசாலையில் திருநெல்வேலி தோழர் டாக்டர் ஆர். வி. சொக்கலிங்கம் பி. ஏ.,எம். பி. பி. எஸ். அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஆண்டு விழாவை தோழர் பி. ராமசுப்பு அவர்கள் திறந்து வைப்பார்கள். வரவேற்புத் தலைவர்:- தோழர் டி. ராஜகெம்பீரம். பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்களென டை சங்கக்காரியதரிசிஎழுதுகிறார்.

(6-பக்கத் தொடர்ச்சி.)

களும் வாளாயிருந்தால் இக் கல்லூரியின் நிலைதானென்னே? தமிழ்மொழி எங்ஙனம் வளரும். அப்படி வளரவேண்டுமானால் இத் தலைவரை உடனே அகற்றவேண்டாமா?

கல்லூரியில் போதிப்பதென்ன?

சூரியன் ஒரு பெரிய நெருப்பு உருண்டை இருந்த இடத்திலேயே இருக்கிறதென்று விஞ்ஞான ஆராய்ச்சியாளர் கூறுகின்ற இந் நாளில், சூரியன் ஏழு குதிரை கட்டிய தேரில் போகின்றானா? அல்லது ஒரு குதிரைக்கு ஏழு பெயர்களா? என்ற ஆராய்ச்சியைப் போதிக்கின்றனர். சூரிய சந்திர கிரகணம்,சூரியன் பூமியின் நிழல்களால் உண்டாகின்றதென்று அறிந்த இந் நாளில்-ராகு, கேதுகளான பாம்புகள் சூரியனையும், விழுங்கியுமிழ்கின்றனவென்று கற்பிக்கின்றனர் எவரும் தமிழரைச் சூத்திரனென்று சொல்ல அஞ்சுமின்னாளில், வாய் கூசாது தமிழர்தனை சூத்திரர் என்கின்றனர். மகளிர் கடல் கடந்து செல்லும் இக்காலத்தில், மகளிருடன் கடல் கடக்கலாகாது என்கின்றனர். பதினான்கு வயதுக்கு மேல்தான் பெண்களுக்கு மணம் செய்யவேண்டும் என்று சட்டமேற்பட்டுள்ள இந்நாளில்,பெண்களுக்கு மணப்பருவம் பன்னிரண்டு வயது என்கின்றனர்-என்று இன்னோரன்ன பகுத்தறிவிற்கும் காலதேச வர்த்தமானதிற்குமொவ்வாத விஷயங்களையே போதிக்கின்றனர். இக் கல்லூரியினால் தமிழ்மொழி வளர ஏதுவுண்டா? தோழர்களே! நீங்கள் வெளியில் எவ்வளவு தூரம் புராணக் குப்பைகளை அலசிக் காட்டினாலும் கண்ணாடிபோன்ற தூயமனத்தினரான இளைஞர்களிடை முதலில் போர்த்து வேரூன்றச் செய்வதைத் தடுக்க முயற்சி செய்யாமலிருக்கலாமா? அப்படியிருப்பின் வெள்ளத்தால் கரை உடைப்புண்டபோது தண்ணீர் வரும் வழியை அடைக்காமல் தண்ணீர் பெருகியபிறகு அதை இறைத்துப் போக்குவதற்கு முயலுவதையொக்குமன்றோ. ஆகையால் தமிழர்களே தமிழ்மொழி வளரவேண்டுமானால் தமிழனைவரின் தூயவுள்ளத்தில் அறிவாகிய விதையைப்போட தமிழ்க் கல்லூரியொன்றை விரைவில் நிறுவுமின்!

சென்னை.

பொதுக்கூட்டம்.

சென்னை ஆள்வார் நகர் எம். பி. தங்க காந்தன் அவர்கள் இல்லத்தில் 2-4-34 திங்கட்கிழமை மாலை 6-30மணிக்கு ஓர் சுயமரியாதை பொதுக் கூட்டம் கூடியது. அதுசமயம் தோழர் பி. எம். தங்கரூபன் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் அவர்கள் முடிவுரையாகப்பேசுப்பொழுது தாழ்த்தப்பட்ட நம் சமூக மக்களாகிய 8கோடி மக்களுக்கு அவசியம், சமதர்மமும், சுயமரியாதை உணர்ச்சியும் வேண்டுமென்று சுமார் அரைமணிநேரம் பேசினார். பிறகு ஏ. சமஞானம் அவர்கள் ஏழைக்குழைத்தலே இன்ப வாழ்வு என்று பேசினார். பிறகு தோழர் பி. டானியேல் நமது மக்களுக்கு கட்டாயம் இப்பொழுது கல்வி அவசியமென்றும் முக்கியமாக அவர்கள் சிக்கன முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் நீண்ட நேரம் பேசி முடித்தார். பிறகு தோழர்கள் என். சின்னப்பா, சி. எட்டியப்பா, எம். நடராஜன், ஏம். எஸ். பதி, ரத்தினம், காஞ்சிபுரம் உபாத்தியாயர் வி. எஸ். நடேசன், முனிசாமி, இளையாழ்வார், ஜே. கணேசன், டி. கணேசன் இவர்கள் முறையே பார்ப்பன சூழ்ச்சிகளைப் பற்றியும், பழைய வழக்க பழக்கங்களைப்பற்றி சுருக்கமாகவும் பேசி முடித்தார்கள். பிறகு ஷை கூட்டத்தின் சார்பாகவே எம். நடராஜன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழர் எம். என். சக்கரையம்மாள் ஈன்ற பெண் மகவுக்கு காந்தம்மாள் என்ற திருநாமம் சூட்டப்பெற்றது. பிறகு தோழர் எம். பி. தங்ககாந்தன் அவர்கள் காலஞ்சென்ற தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள், பெண் உலகிற்கு செய்த ஓர் பெரும் தொண்டைப்பற்றி நாம் இப்பொழுதும் எப்பொழுதும் நன்றிசெலுத்த கடமைப்பட்டு இருக்கின்றோம் என்று பேசினார். பிறகு வந்தன உபசாரம் கூறப்பட்டு இரவு 10-30மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

வாலாஜாபாத் இந்து மத பாடசாலைக்கு ஓர் நன்கொடை.

சென்ற மார்ச்சுமாதம் 31ந்தேதி சனிக்கிழமை காலை 9மணிக்கு தஞ்சை ஜில்லா மஞ்சக் கொல்லை மிராசுதாரரும், பெரும் வியாபாரியுமான தோழர் இராமசாமி முதலியார் அவர்களும், அவர்களது நண்பர்களும் மேற்படிபாடசாலையைப்பார்வையிட்டார்கள். பள்ளியின் அங்கமாகவுள்ள வாசகசாலை நூற்குழுமம், மருத்துவசாலை, தொழிற்சாலை, மாணவ விடுதிமுதலிய வற்றைக் கண்டார்கள். பின்னர் மாணவர் கழகத்திற்குத்தலைமை வகித்து அவர்களது உரையாடல், சொல்லாட்டம், உடைமாற்றம் இவைகளைக்கண்டு அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை அவர்களது முடிவுரையில் தனது வாழ்நாளில் இவ்விதமான நல்ல முறையில் வகுப்பு வித்தியாசம் பாராட்டாமல், ஊக்கத்தோடும், தன்னல மற்றும் நடைபெறும் பாடசாலை இதுவே யெனவும் வியந்து கூறினார்கள். இப்பள்ளியின் அபிவிருத்தியை உன்னிரூபாய் இருநூறு நன்கொடை அளித்தார்கள். இதன்றியும் தன்னால் கூடிய வேறு உதவிகளையும்: செய்வதாக வாக்களித்துள்ளார்கள். தோழர் மணிகோட்டீஸ்வரன் அவர்கள் பி. ஏ. எல்.டி., ஆசிரியர் கடமை என்பதைக் குறித்தும், செங்குந்த மித்திரன் ஆசிரியர் தோழர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் மாணவர்கடமை என்பதைக் குறித்தும் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் கலைந்தது.

கோலாலம்பூர் சுயமரியாதைச் சங்கம்.

இச் சங்கத்தின் இரண்டாவதாண்டு முதலாவது பிரச்சாரக் கூட்டம் 27-2-34உ சனிக்கிழமை 7மணிக்கு தோழர் ஜி. குமரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் தோழர்களான எஸ். இராமசாமி, ஒழுக்கம் என்பதுபற்றியும்,கலியபெருமாள் முயற்ச்சி என்பதுபற்றியும், ஆ.மு. அழகேஷ் அடிமை என்பதுபற்றியும், எஸ். எம். சுப்பையா, சி. எஸ். குமரசாமி மதுவிலக்கு என்பதுபற்றியும், ஜி. சிங்காரம் ஒற்றுமை என்பதுபற்றியும் பேசினார்கள்.

பிறகு தோழர்களான செல்வநகர் A. W. குப்புசாமி அவர்களும் ஜோலார்பேட்டை தோழர் பார்த்தசாரதி அவர்களின் தந்தையாகிய தோழர் வரதராஜலு அவர்களும் முறையே 5-1-34ல் மரணமடைந்ததைக் குறித்து அநுதாபம்காட்டுவான் வேண்டி ஒரு நிமிஷம் நிம்மதியாக இருக்கப்பட்டது.

தலைவர் முடிவுரை கூறியதும் கௌரவக் காரியதரிசி சமதர்மநாஸ்திக தோழர் எஸ். எம். ராமய்யா அவர்களால் வந்தனோப சாரங்கூறப்பட்டு கூட்டம் 10மணிக்கு இனிது முடிந்தது.

குறிப்பு:—இச்சங்கத்தில் சனிக்கிழமை தோறும் பிரச்சாரக் கூட்டங்கள் 5-30 மணியிலிருந்து 9வரைக்கும் நடைபெறும்.

தேவை.

தக்க டிபாசிட் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு

உரிகம்

காரைக்குடி

ஆகிய இரண்டிடங்களுக்கும் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

மானேஜர் "புரட்சி" ஈரோடு.

சுயராஜ்யம் யாருக்கு?

(ஆசிரியர்:- தோழர் ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.,)

சுயராஜ்யம் யாருக்கு என்ற புஸ்தகத்தின் மூன்றாம் பாகம் அதாவது எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகம் அச்சாகி விட்டது. புஸ்தகம் வேண்டுமென்று ஏற்கனவே பணமும், ஸ்டாம்பும் அனுப்பியவர்களுக்கு, இவ்வாரத்திற்குள் புஸ்தகங்கள் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே கைவசமிருப்பதால், புஸ்தகம் வேண்டுவோர் முந்திக்கொள்ள வேண்டும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

உலக முக்கிய பிரச்சினை, தேசியமும் மூட நம்பிக்கையும், சுயராஜ்யமும் தனி சொத்துரிமையும் சமதர்ம லக்ஷணம், சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, தேசிய அரசுகள் இருக்கா, சமதர்ம ஆக்ஷிமுறை, ஜாதி மதம் ஒழிக்கும் வழி, தனிவுடமையின் கொடுமை, பொதுவுடமை விளக்கம், சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம் சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

இதன் விலை அணா 3.

கிடைக்குமிடம்:—

சமதர்மப் பிரசுராலயம்,
22, சவுத்பீச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

The Right of Temple Entry.

By.

P. Chidambaram B.A., B.L., M.L.A.

Price Re. 1. Only.

Copies can be had of:-

"Kudi Arasu" Publishing House, Erode.
R. B. P. Society Ltd., Erode.

சுயமரியாதை வாலிபர் சங்கம். உடுமலைப்பேட்டை.

உடுமலைப்பேட்டை சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் ஆரம்பக்கூட்டம் தோழர் எம். எஸ்.கனகராஜன் அவர்கள்மாடியில் 2-4-34 (திங்கட்கிழமை மாலை 5மணிக்கு) ஆர். ராஜகோபால் அவர்கள் தலைமையில்கூடியது. கூட்டத்திற்கு சுமார் 25 தோழர்களுக்கு மேல் வந்திருந்தனர்- அக் கூட்டத்தில் கீழ்க்கண்டவர்களை உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:—தோழர் ஆர். ராஜகோபால்.

உபத்தலைவர்:—தோழர் சென்னியப்பன்

காரியதரிசிகள்:—தோழர் எம். எஸ். கனகராஜன், ஜெ. அ. சத்தார்

பொக்கிஷதார்:— தோழர் எஸ். மாரியப்பன்

நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்கள்:—தோழர்கள்சி. பட்டாபிராமன் ஆர். லட்சுமணன், டபிள்யூ. வி. வெங்கடாசலம், ஆர். வெங்கிடாசலம், மகாலிங்கம், பி. ராமசாமி, வி. சேஷாசலம், சி. ராமராஜலு, சி. ராமசாமி, ஆர். வேலுசாமி, எம். கே. துரைசாமி, கே. துரைசாமி எஸ். கே. சீதாலு.

பின்பு கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறியது.

தீர்மானங்கள்

1. தோழர் கனகராஜன் அவர்கள் மாடியில் இச் சங்கம் நடைபெறுவதென்று தீர்மானிக்கிறது.

2. மாகாண நிர்வாகக் கமிட்டி திட்டத்தின் படி குறைந்தது இத் தாலுகாவில் 200 அங்கத்தினர்கள் சேர்ப்பது என்று தீர்மானிக்கிறது.

3. கோவை ஜில்லா சென்டிரல் கமிட்டிக்கு இன்னும் இரண்டு அங்கத்தினர்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இச் சங்கம் கோவை சென்ரல் கமிட்டிக்கு சிபார்சு செய்கிறது.

4. பிரசாரத்திற்காக தோழர்கள் கே. வி. அழகர்சாமி, ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், ஆர். அன்னபூர்ணி முதலியவர்களை வரவழைக்க இச் சங்கம் தீர்மானிக்கிறது.

பின்பு தோழர் கனகராஜன் அவர்களால் வந்தனோபசாரம் கூறிய பின் கூட்டம் இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

மானூர்.

திருநெல்வேலி தாலூகா மானூரைச்சேர்ந்த கரம்பை என்ற கிராமத்தில் 30-3-34 வெள்ளிக்கிழமை மாலை சுமார் 7-30 மணிக்கு ஓர் சுயமரியாதைப் பொதுக் கூட்டம் எஸ். மாசிலாமணி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் சுமார் 200 ஆண்களும், பெண்களும் அக் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள்.

எம். என். மோசஸ் அவர்களால் சுயமரியாதைப்பாடல்கள் பாடப்பெற்று கூட்டம்தொடங்கியது. ஆர்.ஏசுதாசன் அவர்கள் ஒற்றுமை என்பது பற்றியும், எம். என். மோசஸ் அவர்கள் 'கடவுளும், மதமும்' என்பது பற்றியும், சி பிச்சையா அவர்கள் பொதுவுடமையைப்பற்றியும்பேசினார்கள்.

அக்ராசனாதிபதி அவர்கள் கல்வி விஷயத்தைப்பற்றி வெகு தெளிவாக ஜனங்களுக்கு எடுத்து உரைத்தார்கள். சுமார் இரவு 11-30 மணிக்கு வந்தன உபசாரத்துடன் கூட்டம் முடிவு பெற்றது.

(ஒரு நிருபர்)

புதுக்கோட்டை.

விவசனூர் பங்குனி உத்திர ரதோஸ்வத்தில் 30-3-34உ திருச்சிபெரிய சூரியூர் பொதுஜன ஊழிய சங்கத்தாரின் பிரசார பஜனைக்கோஷ்டியார் (பெரியசூரியூர் எம். பி. சாமி, தங்கையா முதயலியோர் தலைமையில்) ஜீவகாருண்யமும், தொழிலாளர் இம்சையும் என்பது பற்றியும், கோவிற்பலியின் அநாகரீகத்தையும் விக்கிர ஆராதனையும், வீன் செலவும் என்பது பற்றியும் பஜனை பாடல்கள் மூலமும், சொற்பொழிவு மூலமும் பிரசாரம் செய்யப்பட்டது. அது போது புதுக்கோட்டை புலியூர் அறிவு நிலையத் தலைவர் ஆர். எஸ். சிவம் வந்திருந்து ஷை பிரசாரத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது என நமது நிருபர் எழுதுகிறார்.

ஸ்தல ஸ்தாபனங்களில் ஆதிதிராவிடருக்கு உத்தியோகம் வழங்கும் நீதி.

சென்னிமலை போர்டு எலிமெண்டரி பாடசாலையில் காலியான தலைமை ஆசிரியர் வேலைக்கு ஷை பாடசாலையில் முதல் உதவி ஆசிரியராயிருந்தவரும் போர்டில்12-13வரு சர்வீசுடையவரும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்சேர்ந்தவருமான டி. மனுவேல் அவர்கள் தனக்கு ஷை தலைமை ஆசிரியர் வேலையை கொடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தும் ஷை தலைமைஆசிரியர் ஸ்தானம் டி. மனுவேல் அவர்களைவிட கம்மி ஈரோடுதாலூகா போர்டு சர்வீசுடைய பிராமணர் ஒருவருக்குக் கிடைக்கப்பட்டிருக்கிறது. இந்த தோரணையைப் பார்த்தால் ஆதிதிராவிடர்களுக்கு உத்தியோகம் வழங்கும் நீதி எம மட்டில் நியாயமாகவிருக்கிறதென்பது விளங்குகிறது. நாதர் பிரசிடெண்டு அவர்கள் ஈரோடுதாலூகா ஹரிஜனகமிட்டி அங்கத்தினராயிருந்தும் ஆதிதிராவிடருக்கு தலைமை ஆசிரியர் பதவியைக் கொடுப்பதற்கு வராமல், பிராமணருக்குக் கொடுக்க மனம் வந்தது பெரிதும் வருந்தத்தக்கதே.

சென்னை மைலாப்பூர் சுயமரியாதைச் சங்கம்

இச் சங்கத்தின் ஆதரவில் சென்ற திங்கட்கிழமை (2-4-34) மாலை 6-மணிக்கு சென்னை மைலாப்பூர் நொச்சிக்குப்பத்துக்கடுத்த கடற்கரையில் (ஐ. ஜி. போலீசாபீசுக்கு எதிரில்) ஒரு பொதுக் கூட்டம் கூடியது. திரளான ஜனங்கள் வந்திருந்தனர். தோழர்கள் சி. டி. நாயகம், சிதம்பரம் அம்மையார், ம. சிங்காரவேலு, பாரதிதாசன், குருசாமி, அழகப்பர், பொன்னம்பலனார், டி. ரங்கநாதம், தங்கராஜ், ராஜவடிவேலு, பி, டாங்குசம், என். டி. பிள்ளை, கபாலி முதலியார், சொக்கலிங்க ஆச்சாரி, வித்துவான் குமரகுருபர், பரமசிவ சாமியார், பி. ஆறுமுகம் முதலிய அன்பர்களும் விஜயம்செய்திருந்தனர்.

முதலில் தோழர் ஒருவரால் சுயமரியாதைப் பாட்டுகள் பாடப்பட்டன. மேற்படி கூட்டத்திற்குத் தோழர் ம. சிஙகாரவேலு தலைமைவகித்தார். தோழர் எஸ். குருசாமி அவர்கள் சுயமரியாதைக் கட்சியின் நோக்கத்தைத் தெரிவித்து இவ்வியக்கத்தைப்பற்றி பார்ப்பனர்கள செய்துவரும் பார்ப்பனக் குறும்புகளை எடுத்துச் சொன்னார்.

தோழர் செ. தெ. நாயகம் அவர்கள் பேசியபோது எல்லாத் தேசத்திலும், எல்லாக் காலத்திலும் திருடர்களும், கொலைபாதகர்களும் பாடுபடாமல் பிறர் உழைப்பில் வாழ்கிறவர்களும் இருந்தார்கள்—இருக்கிறார்கள். இக் கூட்டத்தாரை ஒழிக்க முடியுமா அல்லது இவர்களை நல்வழிப்படுத்த முடியுமா என்று தமக்குச் சந்தேகமிருப்பதாகக் கூறினார்கள். அதற்குத் தலைவர் விடையளித்ததாவது:—

தனது அல்லாத பொருளை எடுக்கிறவன் திருடன். பிறர் உழைப்பில் ஜீவிக்கிறவன் சோம்பேறி. பிறர் உயிரைக் கொல்கிறவன் கொலைபாதகன். கொலைகள் பெரும்பாலும் பொருளைப்பற்றியே உண்டாகிறது. இந்தத் திருடர் கொலைபாதகர் சோம்பேறிகள் ஆகிய இக் கூட்டத்தார் தனிவுடமைத் தத்துவம் (பணக்காரன் ஏழை என்னும் பிரிவு) இருக்கிறவரையில் இருப்பார்கள். பொதுவுடமைத் தத்துவம் உலகத்தில் பரவுமானால் இந்தக் கூட்டத்தார் ஒழிந்து போவது திண்ணம். ஒரு ஆறு, அல்லது வாராவதி எல்லோருக்கும் பொதுவானது. ஆகையால் அதை ஒருவரும் திருடுவதில்லை. அதைப்போலவே வீடு, வாசல், நிலம், சொத்து முதலிய எல்லாப் பொருள்களும் பொதுவாய்விடுமானால் ஒருவனும் திருடமாட்டான். அதனால் கொலை முதலிய குற்றமும் உண்டாகாது. ஆகவே பொதுவுடமைத் தத்துவத்தில் குற்றவாளிகளிருப்பதற்கிடமில்லை என்று பதிலளித்தார். பின்னர் தோழர் ஏ. பொன்னம்பலனார் அவர்கள் இந்திய சமுதாய வாழ்க்கையின் குறைபாடுகளைப்பற்றி விரிவாகப் பேசினார்-

பிறகு தலைவர் முடிவுரை கூறிய பின் கூட்டம் கலைந்தது என்று காரியதரிசி எழுதுகிறார்.

சமதர்ம சங்கம். காக்ரன் பேசின் ரோட் நியூவ் செட்டில்மெண்டு மதராஸ்.

3-4-34 தலைவர் தோழர் டி வீரபத்திரன் அவர்கள் தலைமை வகித்து முன்னுரைபேசியபின் தோழர் கே. சி. வடிவேல் அவர்களால் கொண்டுவரப்பட்ட கீழ் குறித்துள்ள தீர்மானங்கள் தோழர் சவுரிநாதன் அவர்களால் பேசப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நமது சங்கத்தார் 14-5-34-ந்தேதியில் சிஞானம் பார்க்கில் ஒரு பொதுக்கூட்டமும், மறுவாரத்தில் ஐக்கோர்ட்டு பீச்சில் ஒரு பொதுக் கூட்டமும் போடும்படி தீர்மானிக்கப்பட்டது

நமது சங்கத்தின்காரியதரிசியான தோழர் கே. சி. வடிவேலுக்கு பதிலாக தோழர் பி. எஸ். திருநீலகண்டன் அவர்களை காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

நமது சுயமரியாதை சென்ட்ரல் நிர்வாக சபையாரால் வரப்போகும் மேதினத்திற்காக வேண்டியும் இன்னும் பொதுக் காரியங்களையும் கவனிக்க வேண்டி ஒரு பொதுக் கமிட்டி கூடுகிறபடியால் சுயமரியாதை மன்றத்தின் மூலமாய் தெரிவித்தப் பிரகாரம் ஒவ்வொரு சங்கததினிடமாகவும் 2-அங்கததினர்களை அனுப்பும் படி கேட்டுக்கொண்டதின் பேரில் நமது சஙகத்தின் மூலமாய் தோழர்களான சவுரிநாதன் அவர்களையும, கிருஷ்ணசாமி அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பெற்று கூட்டம் இரவு 9மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்ததென காரியதரிசி தோழர் கே. சி. வடிவேலு எழுதுகின்றார்.

விக்கிரமசிங்கபுரம் விஸ்வகர்ம பிராஞ்சு சங்கம் ஸ்தாபனம்.

அம்பாசமுத்திரம் தாலூகா விக்கிரமசிங்கபுரம் மெயின்ரோடு தோழர் செல்லம்பிள்ளை அவர்கள் மேடையில் 26-3-34உ திங்கள் இரவு 8-மணிக்கு கல்லிடைக்குறிச்சி தோழர் ஏ. சிவன் அவர்கள் தலைமையின் கீழ் சங்கக்காரியதரிசி தோழர் கே. என். தங்கவேலு அவர்கள் திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம சமூக சீர்திருத்த சங்கததின் பிராஞ்சு திறந்து வைத்தார்கள். தோழர்களான ஏ. முத்துகிருஷ்ணன், பி. கந்தசாமி சி. ஏ. முத்தையா சொற்பொழி வாற்றினார்கள பின்னர் விக்கிரம சிஙக புரம நிர்வாக சங்கத்திற்கு ஷை தோழர் எம. நயினார் அவர்களைக்காரியதரிசியாகத தேர்ந்தெடுக்கப்பட்டது.

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

ஞுக்குள்ளேயே ஜீவனும்ச உதவியைப்பற்றி ஓர் முடிவும் ஏற்படாத பக்ஷத்தில் சாதாரண லாசூட் மூலம் முடிவேற்படுத்திக் கொள்ளலாம். இதைப்போலவே தங்கள் குழந்தைகளின் பாதுகாப்புக்கான நிதிக்கு ஒவ்வொருவரும் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி ஒரு ஒப்பந்தத்துக்கு தாங்களாகவே வராவிட்டால், சாதாரண லா சூட்போட்டு கோர்ட்டில் முடிவு செய்து கொள்ளலாம். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு குழந்தைகளின் க்ஷேமத்தைக் கருதியும், புருஷன் மனைவி நிலைமைகளை கவனித்தும், குழந்தைகள் யாருடைய பாதுகாப்பில் வளரவேண்டுமென்று கோர்ட்டார் கட்டளையிடுவார்கள். சாதாரணமாக தாயினிடமே குழந்தைகளை ஒப்படைக்கப்படுகிறது. அவள் குடிக்காரியாகவும், ஒழுக்கங்கெட்டவளாகவுமிருந்தால் அப்போது குழந்தைகளை தகப்பனிடம் ஒப்படைக்கப்படுகிறது.

குழந்தைகள் பாதுகாப்பு.

குழந்தைகள் பிறக்கும் போது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சக்தியற்ற நிலைமையில் இருக்கின்றன. அவ்வித சக்தி அவைகளுக்கு ஏற்படுகிற வரையில், யாராவதொருவர் காப்பாற்றியாக வேண்டும். இப்படிக் காப்பாற்ற இயற்கையாகவே அமைந்துள்ளவர்கள் தாயும், தந்தையுமாவர். அவ்விருவரே அக் குழந்தைகளை இவ்வுலகுக்கு கொண்டு வந்தவர்கள் ஆயினும் குழந்தையைப்பெற்றதாயை மிகவும் எளிதில் அறிந்து கொண்ட போதிலும், அக்குழந்தையின் தகப்பன் இவன் தானென்று சில சமயங்களில் திட்டமாய் சொல்ல முடிவதில்லை. இவ்வித சந்தேகங்களையும் தகராறுகளையும் போக்குவதற்காகவே கலியாணமென்னும் சடங்கு அவசியமாயிற்று. இக்காரணத்தைப் பற்றியே புருஷனும், மனைவியும் இணைபிரியாது கூடிவாழ சில சமயங்களில் நிர்ப்பந்திக்கவும் படுகிறது.

ஆனால் சோவியத் ஆட்சியில் தாய் தந்தையர்களை நிர்ணயிக்க கலியாணச் சடங்குகளே அவசியமில்லை. இரத்தக்கலப்பைக்கொண்டு நிர்ணயிக்கப் படுகிறது. கலியாணம் செய்துகொண்டு பெற்ற பிள்ளைகளுக்கு எவ்வளவு சுதந்திரம் உண்டோ அதே சுதந்திரம் கலியாண மின்றி பெற்ற பிள்ளைகளுக்குமுண்டு. குழந்தை பிறந்த உடனே ஜனன ரிஜிஸ்டரில் அதன் தாய் தகப்பன் பெயர்களைப்பதிவு செய்யப்படுகிறது. ரிஜிஸ்டரில் பெற்றோரின் பெயர்களை தப்பிதமாகவோ, அரை குறையாகவோ, பதிவு செய்யப்பட்டிருந்தால் அக்குறிப்பிட்ட குழந்தைக்கு வார்சாகவருகிறவர்கள் நீதி ஸ்தலத்துக்குப்போய், அங்கு தாங்கள் தான் அக்குழந்தையின் பெற்றோர்கள் என்று திடமாக ருசுப்படுத்தவேண்டும். குழந்தையின் பாதுகாப்பையும், நன்மையையும் உத்தேசித்து தாயானவள் தான் கர்ப்பமாக இருக்கும் போது அல்லது பிரசவித்த பிறகு அந்தக் குழந்தையின் தகப்பனுடைய பெயர், தொழில், இடம், விலாசம் முதலியவைகளை விபரமாக எழுதிய ஓர் பிரயாணப் பத்திரத்தை சிவில் ரெஜிஸ்டிரி ஆபீஸில் தாக்கல் செய்ய வேண்டும். இதைச் செய்ய அவளுக்கு முழுச் சுதந்திர மளிக்கப் பட்டிருக்கிறது. உடனே இவ்விஷயத்தை அந்தப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விலாசதாரனுக்கு அந்த ஆபீஸ் தெரிவிக்கிறது. மேற்குறித்த விலாசதாரன் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் மாதகாலத்திற்குள் யாதொரு ஆக்ஷேபணையும் செய்யாதிருந்தால் அவனே அக்குழந்தையின் தகப்பனாக முடிவு கட்டப்படும். மேலும் குழந்தையின் தகப்பனாக முடிவுகட்டப்பட்டவன் அறிக்கை பெற்ற தினத்திலிருந்து ஓர் வருடத்துக்குள் குழந்தையின் தாயின் மேல் ஒரு லா சூட்போட்டு, அவள் தன்மேல் சுமத்திய அபாண்டப்பொய்யை வெளிப்படுத்தி, தான் அக்குழந்தையின் தகப்பனல்லவென்று வாதாடலாம். இரு தரப்பினருடைய விவாதத்தைக்கேட்ட பின் கோர்ட்டு தீர்ப்பளிக்கும். அத் தீர்ப்பில் அம்மனிதனே அக்குழந்தையின் தகப்பனென்றிருந்தால் அவன், தாயின் கருத்தரிப்பு பிரவசம் முதலியவைகளுக்கு செலவாகும் பணத்தையும், பிள்ளை பிறந்த பிறகு அப்பிள்ளையின் போஷிப்புக்கான பணத்தையும், தாயின் கருப்பத்தின் போதும், பிரசவத்துக்குப்பின் ஆறுமாத காலமும் அவள் சொந்த செலவுகளுக்கான பணத்தையும் சட்டப்படி கொடுக்கக் கடமைப்பட்டவனாகிறான். மேற்கூறிய உண்மைத் தகப்பனைக் கண்டு பிடிப்பதுபற்றி நடத்தும் கேசில கோர்ட்டுக்கு தாயானவள் தான் கருத்தரிக்கும் சமயத்திலோ அன்றி சற்று முன்போ பலரிடம் சம்பந்தம் வைத்திருந்ததாக தெரியவந்தால் தீர விசாரித்து அந்தப் பலரில் ஒருவனை தகப்பனென நிச்சயிக்கும் நிச்சயிக்கப்பட்டவன் மேல் குறிப்பிட்ட செலவுகளுக்கான பண உதவி செய்ய வேண்டும். முதலாளிகள் சட்டப்படி ஒரு பாவமுமறியாத பச்சிளங்குழந்தைகளின் வாழ்க்கைகளைப்பாழ்படுத்தும் பட்டங்களான 'சட்டரீதியாய்ப் பிறந்த' குழந்தை, 'சட்டரீதிதவறி பிறந்த' குழந்தையென்பவைகளை ரஷியா ஒழித்தெரிந்து விட்டதைக்காணலாம். பணக்கார ஆதிக்கங்கொண்ட தேசங்களிலிருப்பது போன்ற உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை என்கிற பேதங்கள் ரஷ்யாவில் இல்லாமல் யாவரும் ஒரே அந்தஸ்திலிருப்பதால் கற்பமுற்ற ரஷியமாது அபாண்டமாக பிறர் பேரில் தகப்பன் பட்டத்தைச் சுமத்துவது கிடையாது. உண்மையில் அவள் கர்ப்பத்துக்கு யார் காரணனோ அவனையே தான் காட்டுவாள்.

குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பு தாய் தந்தை இருவரையும் சேர்ந்தது. ஒவ்வொருவரும் குழந்தையின் பாதுகாப்பிற்கான பொருளை எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது அவரவர்கள் சம்பாதனையைப் பொறுத்தது. குழந்தைகளின் வளர்ச்சிக்கான காரியங்களை இருவரும் சேர்ந்து செய்ய வேண்டும். பிள்ளைகளின் மைனர் பருவத்தில் சரிவரக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் சமூகத்துக்கு நன்மை விளைவிக்கும் காரியங்களில் பிள்ளைகளைப் பழக்க வேண்டிய பொறுப்பும், தாய்தந்தைகளைச் சார்ந்தது. பிள்ளைகளின் நன்மைகளைப் பிரதானமாகக் கருதி தாய் தந்தையர்களுக்களிக்கப்பட்ட உரிமைகளை அவர்கள் துஷ்பிரயோகம் செய்தால், கோர்ட்டார் அவ்வுரிமைகளை பறிமுதல் செய்து பிள்ளைகளை அரசாங்கத்தின் பாதுகாப்பில் வைப்பார்கள் தாய் தந்தையர்களிடமிருந்து மேற்சொன்ன உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டதனால் அவர்கள் பொறுப்பு அதோடு முடிந்து விட்டதென எண்ணிவிடலாகாது. ஏனென்றால் குழந்தைகள் இவர்களின் நேரிடையான பாதுகாப்பில் இல்லாவிட்டாலும் அவைகளின் பாதுகாப்பிற்கான செலவுகளை தாய் தகப்பன் மாரே கட்டிக் கொடுக்கவேண்டும். சம்பாதிக்கும் திறமை பெற்ற பிள்ளைகள் தங்களின் வலிவு குன்றிய தாய் தகப்பன்மாருக்கு உதவி செய்ய வேண்டும்.

தாய்தகப்பனுக்குப் பொதுவான குடும்பப் பெயரிருந்தால் அப்பெயரை குழந்தைக்கு யிடப்படும். அப்படி பொதுப்பெயரொன்று மில்லையானால் தாய் தந்தை இருவரும் கலந்து தங்களுக்கிஷ்டமான ஓர் பெயரிடலாம். இதில் தகராறு ஏற்பட்டால் பஞ்சாயததார் ஓர் பெயரிடுவார்கள். விவாகரத்துக்குப் பிறகும் அதே பெயர்தானிருக்கும். கலியாண சம்பந்தமாயும், குடும்ப சம்பந்தமாயும் செய்யப் இப்புரட்சியை சட்டத்தின் மூலம் செய்ய முடிந்த போதிலும், பாட்டாளி மக்களுடைய பூரண ஒத்துழைப்பில்லாதிருக்குமானல் அச்சட்டங்களை அமுல் நடத்த முடிந்திராது. கோடிக்கணக்கான ஆண் பெண் தொழிலாளிகளின் சம்மதி பெற்றே மேற்கண்ட சட்டங்கள் யாவும் செய்யப்பட்டன. இவ்விதம் செயயப்பட்டசட்டங்களே முதலாளி உலகத்தின் மனதை திடுக்கிடச்செய்து விட்டன. பொதுஉடமை கொள்கைகொண்ட வாழ்க்கைக்கு இவ்விதச்சட்டங்கள் மிகவும் இன்றியமையாதவையாகும். இந்த உலகம் பூராவுமுள்ள எந்தப் பெண்கள் இயக்கங்களாலும் செய்ய முடியாத ஒன்றை ரஷியா வெற்றிகரமாக முடித்துக் காட்டிற்று. அந்த ஒன்றுதான் ஆண் பெண் சமத்துவம் என்பதுமேலும், ஆபாசமான சொற்களான "கலியாணமின்றி பிறந்த," 'சட்ட ரீதி தவறி பிறந்த' என்னுமிவைகளுக்கு அர்த்தமில்லாமல் செய்து விட்டது. 'விபசாரம்' என்னும் சொல்லை சட்ட புத்தகத்திலேயே இல்லாமல் செய்து விட்டது. இந்த 15 வருடத்திய பொது உடமை ஆட்சி விபசாரத்தை வேரோடு சுட்டெரித்து விட்டது.

உண்மை நாடுவோர் கழகம் புரசை வாக்கம். சென்னை.

25-3-34 ஞாயிறு காலை 8மணிக்கு பொன்னன் தெருவு 65 வது என்னுள்ள இல்லத்தில் தோழர் பி. பி. பெருமாள் அவர்கள் தலைமையில் வாராந்திரக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் எஸ். எம். பொன்னம்பலம், பி. நாராயணன், எம். இ. எல் தாஸன் ஆகியவர்களால் முன்னேற்றமும், மூட நம்பிக்கையும் என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். இறுதியில் தலைவர் முடிவுரை கூறியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் 10.30 மணிக்கு முடிவடைந்தது.

(ஒரு நிருபர்)

சென்னை. சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் அங்கத்தினர்கள் பொதுக்கூட்டம் ஒன்று 31-3-34௳ சனிக்கிழமை மாலை 6-மணிக்கு 221 தங்கசாலை வீதியில், மன்றத்தின் உபதலைவர் தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

தீர்மானங்கள்.

1. சென்னை மத்திய சுயமரியாதை சங்கத்துக்கு மன்றத்தின் பிரதிநிதிகளாக தோழர்கள் எஸ். ரங்கநாதன், பி. என். குருசாமி ஆகியவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.

2. தற்போது இருந்துவரும் மாத சந்தாவை நீக்கி 6-மாதத்துக்கு ஒரு ரூபாயும், 1-வருஷத்துக்கு இரண்டு ரூபாயாகவும், செலுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

3. தற்சமயம் மன்றத்தில் உள்ள எல்லா அங்கத்தினர்களும், மாகாண சுயமரியாதை சங்கத்தில் அங்கத்தினர்களாக சேருவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஷை மன்றத்தின் வாராந்திரக்கூட்டமொனறு 1-4-34 ஞாயிறு பிற்பகல் 2மணிக்கு 221-தங்கசாலை வீதியில் தோழர் என். பி. பத்பனாபன் தலைமையில் கூடிற்று. அதுசமயம் தோழர்கள் பி. என். சம்பந்தம், கே. எஸ். நாதன், டி. ராதாகிருஷ்ணன், காஞ்சி ச. கலியாண சுந்திரம் முதலியோர் வாசகசாலையின் அவசியம் என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தின பின், கூட்டம் இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்)

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

கள் வெளியிடாகிய செந்தமிழ்ச் செல்வியில், அறிக்கைகள் வெளியிட்டவர்கள், வார வெளியிடாகிய லோகோபகாரி, புரட்சிகளில் ஏன் வெளியிடவில்லை. இப்பொழுது லோகோபகாரிக்கு அனுப்பப்பட்ட வேண்டுகோள், புரட்சிக்கு அனுப்பப்பட்டதா? மேலே காட்டப்பட்டவைகள் மாநாட்டின் ஏற்பாட்டின் கண்ணுள்ள குறைகள்தானு, அவைகள் எதிர்பாராது வந்துசேர்ந்தனவா, தடுத்தும் நீங்காமல் மீந்தனவா, வேறு நோக்கால் சேமித்துச் சேர்க்கப்பட்டவைா, என மற்றுப் பற்றென்றின்றித் தமிழ்ப் பற்றுடன் ஆராயவேண்டுகிறேன். காரணம் எதுவாயிருபபினும், சென்னையில் தமிழன்பர் மாநாட்டைக் கூட்டிப் பார்ப்பனீயத்தை வளர்க்க முயன்றதுபோல், நெல்லையில் தமிழர் மாநாட்டைக் கூட்டிப் பிரிதொன்றை வளர்க்க முயலுகிறார்கள் எனத் தமிழ்ப் பற்றுடையோர் பிறர் கூற இடமுளதா, இலதா எனவும், உளதாயின் அதை மாற்றுவது மாநாட்டாரின் கடமையல்லவா எனவும், அன்புடன் ஆராய வேண்டுகிறேன். இனியேனும் ஒவ்வொரு தமிழரிடத்தும், தமிழ்ப்பற்றை வளர்க்கவேண்டுமென்ற பெரும் ஒரே நோக்கத்துடன் மாநாட்டினர் வேலை செய்வார்களாக. பிறமக்களைப் பிரித்து, மாநாட்டின் பெயரால் தன்னயத்தை வளர்க்க விரும்பும் மக்கள் கையில் மாநாடு சிக்குண்டு திணரக் கூடாதென்பது பல தமிழ்ப் பற்றுடையோர் விருப்பம். நெல்லையின் நற்பெயர் காககப்பட வேண்டுமென்பதும் எனது தனி விருப்பம்.

கும்பகோணம்

சுயமரியாதை வாலிபர் சங்கம்.

சுயமரியாதை வாலிபர்சங்க புதிய கட்டிட திறப்புவிழா.

மகாமகக்குளம் வடகரையிலுள்ள புதியசங்க கட்டிடத்தில், 1-4-34உ ஞாயிறன்று மாலை 4-மணிக்கு வந்த சுமார் 200 தோழர்களுக்கு தேனீர் விருந்தளித்த பின்னர், தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பித்து தோழர் சாமி சிதம்பரனுர் அவர்களில் சங்கத்தை திறந்துவைத்து,சுயமரியாதை இயக்கம் தோன்றிய வரலாற்றையும், அதன் தற்போதைய நிலைமையைப்பற்றியும் சுமார் ஒரு மணிநேரம் உபன்யாசித்தார்கள். பிறகு காரியதரிசியால் பழைய வரவுசெலவு கணக்குகள் படித்து காண்பிக்கப்பட்டபின், கீழ்கண்ட தோழர்களை நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் கே. கே. நீலமேகம் தலைவர், ஜீ. ராமையயா உபத்தலைவர், சி. சாமிநாதன் காரியதரிசி, டி. ஆர். வரதன் உபக்காரியதரிசி, எஸ். சுப்பராயன் பொக்கிஷதார், வி. சின்னதம்பி, பி. ஆத்மநாஜன், கே. எஸ். சுப்ரமணியம், வி. முத்துசாமி, பி. முருகையன், எஸ். எஸ். கோவிந்தசாமி, எஸ். கிருஷ்ணசாமி ஆகிய 7 பெயர்களையும் நிர்வாக மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர் தோழர்களான கே. ஆர் சுப்பிரமணியம், சி. சாமிநாதன், கே. எஸ். சுப்ரமணியம், எஸ். ஆர் சாமி முதலியவர்கள் பல விஷயங்களைப்பற்றி பேசிய பின்னர் தலைவர் முடிவுரையுடன் வந்தனுபசாரம் கூறப்பட்டு இரவு 8-மணிக்கு கூட்டம் கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

சேலம் ஜில்லா

சஞ்சீவிராயன்பேட்டை சமதர்ம தொழிலாளர் சங்கம் ஆரம்பம்.

15-3-34 வியாழக்கிழமை மாலை 5-மணிக்கு ஆரம்பக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் செவ்வாய்பேட்டை தோழர் கந்தசாமி மற்றும் பல தோழர்கள் விஜயமானுர்கள். ஷை சங்கத்திற்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்தபின்,தோழர் கந்தசாமி சமதர்ம தொழிலாளர் சங்கம் அவசியம் என்பதுபற்றி பேசியபின் கூட்டம் 7-30மணிக்கு கலைந்தது.

17-3-34-உ சனிக்கிழமை மாலை 6-மணிக்கு ஷை சங்கத்தின் மெம்பர்கள் கூட்டம் கூடிற்று. அதுசமயம் தோழர்R. நடேசன் மற்றும்பல தோழர்கள் விஜயமானுர்கள். அதுசமயம் சமதர்மம் என்பதுபற்றி தோழர் ஆர். நடேசன் சொற்பொழிவு ஆற்றிய பின், சங்க நிர்வாகத்திற்காக தோழர்கள் பி. வரதராஜன். எஸ். சடயன் அவர்களை காரியதரிசியாகவும், ஏ. ஆறுமுகம் அவர்களை பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுத்த பின் 8-30-மணிக்கு கூட்டம் கலைந்தது.

2-4-34உ திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு அங்கத்தினர்கள் கூட்டம், சங்கமைதானத்தில் கூடிற்று. அதுசமயம் சேலம் ஜில்லா சங்க அமைப்பு ஆர்கனைசர்களான தோழர்கள் ஆர். நடேசன், ஏ.எம் பாலுசாமி முதலிய தோழர்கள் விஜயமானுர்கள். தோழர் நடேசன் ஜில்லா கமிட்டியின் அவசியம் என்பதுபற்றி பேசியபின், சில தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானம்.

சேலம் ஜில்லா சுயமரியாதை சங்க அமைப்பிற்கு, தோழர்கள். பி. வரதராஜன், ஏ. ஆறுமுகம் இவ்விருவர் பிரதிநிதிகளை அனுப்புவதாய் தீர்மானிக்கப்பட்ட பின், 7-மணிக்கு கூட்டம் கலைந்ததென சங்க காரியதரிசி எழுதுகிறார்.

'சுந்தரி ஸ்னே.'

ஒரு சுந்தரிஸ்னே வாங்குவோருக்கு ஒரு கைகுட்டை இனும்.

சுந்தரி ஸ்னே தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமள்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட்:- A. V. R. A. அடைக்கப்ப செட்டியார், 52-பந்தர் தெரு, சென்னை.

மணம் நிறைந்தது! குணம் உயர்ந்தது!!

இதைச் சாப்பிடுங்கள்.

காபி, ஓவல், டீ, கொக்கோ முதலான பானத்திற்குப்பதிலாக அநேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ள

சுகானந்த பானச் சூரணம்

ஒன்றே யாவராலும் விரும்பத்தக்கது. வெட்டைச்சூடு, நீரழிவு, நீர்க்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம், பலஹீனம் ஆகிய வியாதிகளை அடியோடு போக்கி இரத்த சுத்தி, ஞாபகசக்தி சுறுசுறுப்பு இவைகளை பூரணமாகத்தரத்தக்கது.

காலை மாலை இரண்டு வேளைகளிலும் மற்ற பானங்களைப் போன்றே உபயோகிக்கலாம். இதனை ஒருமுறை வாங்கி சாப்பிடுங்கள்.

1-டப்பியின் விலை அணு 10.

வியாபாரிகட்கு தக்க கமிஷன் உண்டு.

விலாசம்:— தேசஷண்முர்த்தி தமிழ் வைத்தியசாலை திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா.)



"பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்தினுல் தயார்செய்யப்படுவது வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஸ்டாக்கிஸ்ட்

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார், 52, பந்தர் தெரு, சென்னை.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணு 8.

லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணு 4.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணு 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணு 4.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசங்களை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணு 8.

இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணு 4.

அயோத்தியாகாண்டம் அணு 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணு 4.

தர்ம பரீக்ஷை.

இது புராண காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணு 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்தாால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணு 3.

பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணு 4.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத் தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுகட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துககாட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L, அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய மேலட்டையுடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணு 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பேர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு, தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணு 3.

நான் சந்தேகவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணு 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற முடிவு தேதி 15-5-34

முதல் பரிசு பெற்றவர்.

மியூட்சுவல் கிளப்

டர்பி

6—6—34.

ஓர் முக்கிய பத்திரிகையில் வெளியான விஷயம். (மொழிபெயர்ப்பு)

ஈவினிங் நியூஸ்.

லண்டன் செவ்வாய் 18—3—1931.

லண்டன் பட்டணத்தில் அதிர்ஷ்டப்பெண்.

தன்னுடைய வேலையை விட்டு வெற்றிகாணச் சென்றார்.

9,000 பவுனுடன் ஒரு புருஷன்.

அடியிற்கண்டது லண்டன்மா நகரத்தைச் சேர்ந்த கிளாப்பம் ஹாமன் தெற்கு பாகத்தில் வசிக்கும் "மிஸ். ரோசினு கத்திலீடவுட்" என்ற அதிர்ஷ்டப் பெண்ணின் சரித்திரம்:—

சுமார் 3-வருடத்திற்கு முன் லண்டனில் மேற்கண்ட மாது வேலைக்காரியாகவிருந்தார். பிறகு உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலுடன் தன் வேலையை விட்டு தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். செல்லும்போது கையில் 50-பவுன் முதலுடன் சென்றார். சென்றதும் அங்கு ஓர் வேலை கிடைத்தது. பிறகு அங்கு வசிக்கும் போது ருடீசியா தேசத்தில் சாலிஸ்பரி பட்டணத்தில் வசிக்கும் ஓர் கணக்குவேலை பார்ப்பவர்மீது காதல் கொண்டு அவரை மணக்க நிச்சயித்தார் மணம் செய்து கொள்வதற்குமுன் பெற்றோர்களைப் பார்த்துவர லண்டன் திரும்பினர். அப்போது அவர் கையிலோ 3 பவுன்தானிருந்தது ஆனால் கப்பலைவிட்டிறங்கியவுடன் ஓர் மகிழ்ச்சி தரும் விஷயம் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தது எப்படியென்றால் ஆப்பிரிக்காவிலிருக்கும்போது மியூட்சுவல் கிளப் லிமிடெட் 'மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப்" குதிரைப் பந்தய லாட்டரியில் ஓர் டிக்கட் வாங்கியிருந்தாள். அந்த டிக்கட்டிற்கு முதல் பிரைஸ் கிடைத்தது 9,000 பவுன் தனக்குக் கிடைக்கப்போகும் விஷயத்தை அறிந்து மகிழ்ச்சியடைந்தார். அவரை மணக்கப்போகும் புருஷனும் அதிர்ஷ்டசாலிதான். அவர்தான் டிக்கட் வாங்கிக்கொடுத்தவர். அவர் வாங்கிக் கொடுத்த டிக்கட் முதல் பிரைஸ் வந்ததால் அவருக்கும் 800 பவுன் கிடைத்தது. பிறகு மிஸ். டவுட் கலியாணம் செய்து கொண்டு ஐரோப்பா கண்டம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்ய எத்தனித்து விட்டார். அவர் புருஷனும், இங்கிலாந்து தேசத்தையே கண்டிராதவராதலினால் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்பியைக்காண ஆவலாயினர்.

இந்தியாவிற்கு 1-வது, 2-வது, 3-வது பிரைஸ்கள் கிடைத்திருப்பதோடுகூட ஒவ்வொரு முறையும் பல குதிரைகளும் கிடைத்து வருகிறது.



கூப்பன்களை ஆடிட்டர்களால் தணிக்கை செய்யும் காட்சி.

பிரைஸ் கொடுத்தல்.

நாங்கள் மியூட்சுவல் கிளப் லிமிடெட் வெளியிட்டுள்ள பிரைஸ்லிஸ்டுகள் எமது கவர்ன்மெண்ட் பிரதிநிதியால் சம்பந்தப்பட்ட லாட்டரிகளில் குறித்துக் கொள்ளப்பட்ட விபரங்களுடன் ஒத்துப்பார்த்ததில் சரியாக இருக்கிறதென்பதையும் பிரைஸ் தொகைகள் உரியவர்கட்கு அவர்கள் கேட்டமேல் கொடுக்கப்பட்டதற்கு உள்ள ஆதாரங்கள் எமக்குக்காட்டப்பட்டன என்பதையும் இதன் மூலம் தெரியப்படுத்துகிறோம்.

லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டுக்காக,

[ஒப்பம்] FERDINAND NIGG,
காரியதரிசி.

வாடூஸ், 1930 செப்டம்பர் 3.

எல்லா விடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜண்டு:—

S. K. வரதராஜுலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.

Edited Printed Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.